ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி. லென்ஸ். என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture 2 4 5 B D E
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 02 - 14 மே 2018 | முழக்கம் 072

உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
Bondyயில் புத்தம் புது வீடு விற்பனைக்கு
✓45m² அளவு கொண்ட F2 வீடு
✓மார்ச் மாதம் குடியமரக்கூடியது
✓விலை. 179 000€
110% கடன்
எந்தவித முதலீடும் இன்றி 110% வீதக் கடன் செய்து தரப்படும்
Gare de Bondyயில் இருந்து 1 நிமிட நடைதூரத்தில்
தொடர்பு: சுதன் 07 64 08 93 83



## புதிய வரலாற்றின் தொடக்கம்

## உறவினர்களை நினைவுகூரவும் தடைபோடும் சிங்களப் பேரினவாதம்

## முள்ளிவாய்க்கால் முடிவு – புலம்பெயர் மண்ணில் நாம் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தரப்பட்ட ஆயுதம்!

## பால்பண்ணைத் தொழிலாளிகளின் வாழ்வை பாதிப்புக்கும் சிறீலங்கா வனஜீவராசி மற்றும் வனப்பாதுகாப்பு அதிகாரிகள்

## டக்ளசுடன் ஒரே தட்டில் உணவருந்திய கே.பி

## ஈரான் அணுத்திட்டம் குறித்து பிரான்ஸ் உறுதி

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Rani Restaurant
Spécialités Cuisines Indiennes & Srilnakaises
Rani Restaurant - Traiteur
உங்கள் இல்ல விழாவிற்கு வேண்டிய சைவ-அசைவ உணவுகள்
Tél.: 01 49 44 01 28
09 80 58 20 60
Port.: 06 27 51 29 50
Rani Restaurant Traiteur
www.ranirestaurant.fr
8 Ave. Victor Hugo - 93360 Neuilly Plaisance
email: ranirestaurant@hotmail.com

விரைவில்...
மாணவர்முரசு®
www.eelamurazu.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

## 28ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

Le Blanc Mesnil இல் எமது புதிய 5வது கிளையில் நடனம், ஆங்கிலம், தமிழ் வகுப்புகள்
10, Avenue du Capitaine Fonck, 93150 Le Blanc Mesnil (Le Bourget விமான நிலையத்திற்கு அருகில்)

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்
08-04-2018 சனி ஞாயிறு மாலை 5.30 மணி
20-03--2018 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
14-04-2018 சனி ஞாயிறு காலை 9 மணி
05-03-2018 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
18-04-2018 சனி பி.ப 3.30 மணி (Nationality வகுப்பு)
18-04-2018 புதன் பி.ப 3.30 மணி
20-02-2017 செவ்வாய் வெள்ளி பி.ப 2 மணி (Bobigny)

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்







ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 02 – 14 மே 2018 முழக்கம் 072

"உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத பல சரிவுகளை, பல திருப்பங்களை, பல நெருக்கடிகளை நாம் இந்த வரலாற்று ஓட்டத்திலே எதிர்கொண்டிருக்கிறோம்."

- தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்



# புதிய வரலாற்றின் தொடக்கம்



**(செய்தி ஆய்வு - விவேகன்)**

கடந்த சில மாதங்களுக்கு முன் கற்பனையில் கூட நினைத்துப் பார்த்திருக்க முடியாத திருப்பம், கடந்த வாரம் கொரிய மண்ணில் நிகழ்ந்தேறியிருக்கின்றது. 1953ல் நடந்த கொரியப்போர் அந்நாட்டை இருகூறாக்கி முடிந்த பின்னரும் வட கொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் நீடித்து வந்தது. தனது இராணுவ பலத்தை அதிகரிக்க வட கொரியா மேற்கொண்டு வந்த அணு ஆயுத மற்றும் நீண்ட தூர ஏவுகணைத் தயாரிப்புக்கள் தென் கொரியாவை அச்சத்தின் உச்சத்திற்கே கொண்டு சென்றிருந்தது. எப்போது மீண்டும் போர் வெடிக்குமோ என்ற கொதி நிலையே இதுவரை கொரிய தீபகற்பத்தில் இருந்துவந்தது.

அந்த 65 ஆண்டு காலக் கடும் பகை பலமான கைகுலுக்கலுக்கும் புன்னகைகளுக்குள்ளும் கடந்த வாரம் முதல் மறைந்துபோயிருக்கின்றது. வட கொரிய அதிபர் ஒருவர் தென் கொரியாவுக்குள் முதற் தடவையாக காலடி எடுத்து வைத்ததும், தென் கொரிய அதிபர் ஒருவர் வட கொரியாவிற்குள் காலடி எடுத்துவைத்ததும் ஒரு சில நிமிடங்களுக்குள் நடந்து முடிந்துவிட்ட நிகழ்வாயினும், இந்த நூற்றாண்டின் மிகமுக்கிய வரலாற்றுப் பதிவுகளில் ஒன்றாக அது அமைந்துவிட்டது.

போர் பதற்றம் நிலவி வந்த கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில், வட மற்றும் தென் கொரிய அதிபர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு இரு நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள பான்முன்ஜோம் சமாதானக் கிராமத்தில் கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கொரிய போருக்குப் பின் சண்டை நிறுத்தம் மட்டுமே மேற்கொண்டுள்ள இரு நாடுகளுக்கும் இடையே நிரந்தர சமாதான ஒப்பந்தம் ஏற்படுத்துதல், கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பிராந்தியமாக்குதல் ஆகிய இரு முக்கிய விவகாரங்களை முன்னிலைப்படுத்தி இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

கடந்த ஆண்டின் இறுதிவரை சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வடகொரியா நீண்ட தூர ஏவுகணைச் சோதனைகளையும், அணு குண்டுப் பரிசோதனைகளையும் தொடர்ந்து நடத்தி வந்ததால் கொரிய தீபகற்பத்தில் போர் மேகம் சூழ்ந்திருந்தது.

தொடர்ச்சி 04ம் பக்கம்

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

வீட்டு திருத்தவேலைகள்
உங்கள் வீட்டு திருத்த வேலைகள் அனைத்தும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 07 51 20 27 28

ஈழமுரசு®

"உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 75€
**ஐரோப்பா** 85€
**ஏனைய நாடுகள்** 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# புதிய வரலாற்றின்...

ஐ.நா. பொதுச்சபையும் அமெரிக்காவும், வட கொரியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால், பொருளாதார ரீதியில் வட கொரியா பின்னடைவைச் சந்தித்தது. இந்தச் சூழலில், தென் கொரியாவில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில், தங்கள் நாட்டு வீரர்களை வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் அனுப்பிவைத்தார். கூடவே ஒலிம்பிக் துவக்க விழாவுக்கு தனது தங்கை கிம் யோ-ஜோங்கையும் அனுப்பி வைத்து தென் கொரிய அதிபர் மூன் ஜே-இன்னை நேரில் சந்தித்துப் பேசும் தனது விருப்பத்தை கிம் ஜோங்-உன் வெளிப் படுத்தினார். இது வட - தென் கொரியா நாடுகள் இடையே பிணக்கம் குறைந்த புதிய சூழலை ஏற்படுத்தியது.

இதற்கிடையே திடீர் இரகசியப் பயணம் ஒன்றை கடந்த மாதம் சீனாவிற்கு மேற்கொண்ட வட கொரிய அதிபர், சீன அதிபரைச் சந்தித்துப் பேசிவிட்டு திரும்பி யிருந்தார். நாடு திரும்பியதன் பின்னர் அணு ஆயுத சோதனை இனிமேல் நடத்த மாட்டோம் என்று வட கொரிய அதிபர் அறிவிப்பை வெளியிட்டார்.

இதேவேளை, வட கொரியாவுக்கு தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சங் உய்-யோங் தலைமை யிலான நல்லெண்ணத் தூதுக் குழுவை தென் கொரிய அதிபர் மூன் ஜே-இன் அனுப்பி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, வட - தென் கொரிய அதிபர்களின் நேரடிப் பேச்சுவார்த்தை குறித்து இரு தரப்பு அதிகாரி களும் இரண்டு முறை சந்தித்து, வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த கொரிய மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசித்தனர்.

இரு தலைவர்களும் சந்திக்கும் நிகழ்ச்சி நிரல் பட்டியல் முதல் விருந்து வரையான இந்த மாநாட்டின் எல்லா விபரங்களும் தெளிவாக திட்டமிடப்பட்டன. திட்டமிட்டபடி எல்லைப் பகுதியில், இராணுவங்கள் விலக்கப்பட்ட சமாதான கிராமமான பான்முன்ஜோம் கிராமத்தில் இரு நாட்டு அதிபர்களும் கலந்து கொண்ட 'கொரிய மாநாடு 2018' வெள்ளிக்கிழமை நடைபெற் றது. இதையொட்டி, இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லைக் கோட்டின் வாசலில் காத்திருந்து வடகொரிய அதிபரை தென்கொரிய அதிபர் மகிழ்ச்சிபொங்க கைகுலுக்கி தங்களது நட்புறவை வெளிப்படுத்தி தமது நாட்டிற்குள் வரவேற்றார்.

அப்போது, மூன் ஜே-இன்னின் அழைப்பை ஏற்று கிம் ஜோங்-உன் எல்லைக் கோட்டைத் தாண்டி தென் கொரிய மண்ணுக்குள் காலடி எடுத்து வைத்தார். வட கொரிய அதிபர் ஒருவர் தென் கொரியாவுக்குள் தன் காலடியை எடுத்து வைத்தது வரலாற்றில் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. உடனே வடகொரிய அதிபர் தன் நாட்டுக்குள் காலடி எடுத்து வைக்குமாறு தென் கொரிய அதிபரிடம் கோரியதுடன், அவரது கையைப் பிடித்து தன் நாட்டின் எல்லைக்குள் அவரது காலைப் பதியவைத்தார். இதன்போது அங்கு குழுமி யிருந்தவர்கள் அனைவரும் இந்த நிகழ்வை பெரும் மகிழ்ச்சியுடனும் கைதட்டலுடனும் வரவேற்றிருந்தனர்.

இராணுவ சிறப்பு மரியாதையுடன் செங்கம்பளத்தில் அழைத்துச் செல்லப்பட்டார் வட கொரிய அதிபர். அதனைத் தொடர்ந்து, எல்லைக் கிராமத்தில் அமைந் துள்ள சமாதான இல்லத்துக்குச் சென்று இரு தலைவர் களும் பேச்சுவார்த்தை நடத்தினர். தென் கொரியா - வடகொரியா இடையே இதற்கு முன் 2000, 2007ம் ஆண்டுகளில் உச்சி மாநாடுகள் நடந்துள்ளன. இரண்டும் வடகொரியாவில்தான் நடந்தன. ஆனாலும் அவற்றைவிட இந்தப் பேச்சுவார்த்தை மிகவும் முக் கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

பேச்சவார்த்தையின்போது கிம் ஜோங் உன், எங்கள் நடவடிக்கையால் (அணுகுண்டு சோதனை) அடிக்கடி உங்கள் அதிகாலை தூக்கம் கலைந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இப்போது உங்களுக்கு நான் ஒரு வாக்குறுதி அளிக்கிறேன். இனிமேல் உங்கள் அதிகாலை தூக்கம் கலையாது என்றார். இதன் மூலம் அணு ஆயுத சோதனையை இனிமேல் வட கொரியா நடத்தாது என்ற உறுதி மொழியை அவர் நேரடியாக அளித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், எல்லைச் சுவரை கடந்து வரும் போது உணர்ச்சி மிகுந்த நிலையில் நான் இங்கு வந்தேன். புதிய வரலாற்றின் தொடக்கமாக நான் இங்கு வந்துள்ளேன். கடந்த கால வரலாறுகள் முடிந்து விட்டன. இது தொடக்கம் என்றார்.

பேச்சுவார்த்தையின்போது வட - தென் கொரியாக் கள் இடையேயான உறவுகளை பலப்படுத்துதல், கொரிய தீபகற்ப பகுதியில் அமைதி காத்தல், கொரிய தீபகற் பத்தில் அணு ஆயுதங்களை கைவிடுதல் மற்றும் பரஸ்பர விடயங்களில் இரு தரப்பினரும் நேர்மையாகவும், திறந்த மனதுடனும் கருத்துக்களை பரிமாறிக்கொள் ளுதல் போன்ற விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள் ளது. அத்துடன், அணு ஆயுத பரிசோதனைத் தளங்களை வடகொரியா மே மாதத்தில் மூடும் என அந்நாட்டின் தலைவர் கிம், தென்கொரிய அதிபரிடம் தெரிவித்துள் ளதை தென் கொரியா உறுதிப்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தையின் முடிவில் இரு நாட்டுத் தலை வர்களும் உடன்படிக்கைகளில் கையொப்பம் இட்டுக் கொண்டனர். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்ட பின் இருநாட்டு தலைவர்களும் ஆரத்தழுவிக் கொண்டனர். பின்னர் ஒப்பந்தத்தை உலகம் முழுவதும் இருந்து வந்த ஊடகவியலாளர்கள் முன் காண்பித்தனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

அந்தக் கூட்டறிக்கையில், கொரிய தீபகற்பத்தை முழுவதும் அணு ஆயுதங்களற்ற பிராந்தியமாக நிர்மாணிப்பதே இரு கொரிய நாடுகளின் பொதுவான இலக்கு என்பது இந்தப் பேச்சுவார்த்தை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கொரியப் போர் முடிந்து 65 ஆண்டுகள் ஆகியும், இரு நாடுகளுக்கும் இடை யிலான போரை அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக்



கொண்டு வருவதற்கான நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தம் இதுவரை மேற்கொள்ளப்படாமல் உள்ளது. அந்த ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தி, கொரியப் போரை முறைப்படி முடிவுக்குக் கொண்டு வர இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன. கூடிய விரைவில் வட கொரிய தலைநகரில் மூன் ஜே-இன் சுற்றுப் பயணம் செய்து பேச்சுவார்த்தை மேற்கொள்வார். மேலும், இரு நாட்டுத் தலைவர்களும் அவ்வப்போது நேரடியாகச் சந்தித்தும், நேரடி தொலைத்தொடர்பு இணைப்பின் மூலமும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டின் நினைவாக பான்முன்சோமில் அமைதி கிராமத்தில் மரம் நட்டனர். இதற்காக இருநாடுகளில் இருந்து மண், தண்ணீர் எடுத்து வரப்பட்டிருந்தது. அதன் பின் மதிய உணவாக தங்கள் தங்கள் நாட்டு உணவை தனித்தனியாக உண்டனர். இரவு சிறப்பு விருந்தை தென் கொரியா அதிபர் வட கொரிய அதிபருக்கு வழங்கிக் கௌரவித்தார்.

இதேவேளை, இந்த வரலாற்று நிகழ்வை வரவேற் றுள்ள ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட் டெரெஸ், 'வட கொரிய மற்றும் தென் கொரிய அதிபர்கள் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகும். இரு தலைவர்களும் தங்களது வாக்குறுதிகளுக்கு விரைவில் செயல்வடிவம் தர வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வட, தென் கொரிய தலைவர்களின் உச்சிமாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்திருப்பதற்கு பாராட்டு தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப், 'கொரிய தீபகற்பத்தை முழுமையாக அணு ஆயுதம் இல்லாத பிரதேசம் ஆக்குவதற்கு உறுதி பூண்டிருப்பதற்காக தென் கொரிய அதிபர் மூன் ஜே இன்னாலும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னாலும் நாங்கள் ஊக்கம் அடைந்து உள்ளோம். வரும் வாரங்களில் கிம் ஜாங் உன்னை நான் சந்திக்க உள்ளேன். அதை நம்பிக்கை யுடன் நாங்கள் எதிர்கொள்கிறோம். அது ஆக்கபூர்வ மானதாக அமையும். எதிர்காலத்தில் கொரிய தீபகற்பம் முழுவதும் அமைதியும், வளமும், நல்லிணக்கமும் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறோம். இது இரு கொரியாக்களின் மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த உலக மக்களுக்கும் அவர்களது பிரகாசமான எதிர் காலத்துக்கு வழிநடத்தும் 'என்று கூறியுள்ளார்.

இந்த உச்சி மாநாட்டை இருநாட்டு அரச ஊடகங்க ளும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு என்று வர்ணித் துள்ளதுடன், தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை, சமாதானம், வளம் ஆகியவற்றுக்கான புதிய சகாப்தத்தை தொடங்கி உள்ளதாகவும் கூறியுள்ளன.

ஆனால், வட கொரியாவிற்கும் தென் கொரியாவிற் கும் இடையிலான இந்த நெருக்கத்தை வட கொரியா வின் இன்னொரு பகையாளி நாடான ஜப்பான் மட்டும் சந்தேகத்துடனேயே பார்க்கின்றது. போதிய அளவுக்கு அணு ஆயுத பலம் பெற்றுவிட்டதால், இனி பொருளா தார வளர்ச்சியில் கவனம் செலுத்த விரும்பியுள்ள வட கொரியா அதற்காகவே தென் கொரியாவுடன் நட்புக் கரம் நீட்டியுள்ளதாக அது கருதுகின்றது. 'அணு ஆயுதங் களைக் கைவிடுவதான வடகொரியாவின் அறிவிப்பு திருப்தி தரவில்லை' என்று தெரிவித்திருந்த ஜப்பான், 'வடகொரியாவுக்கு எதிராக தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்' என்றும் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விரைவில் டிரம்பு - உன் சந்திப்பு

இரு கொரிய நாட்டு அதிபர்களின் சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில், இதன் தொடர்ச்சியாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் வட கொரிய அதிபர் கிம் ஜோங்கின் சந்திப்பு இன்னும் சில வாரங்களில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் - வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் இடையிலான சந்திப்பு சிங்கப்பூரில் நடக்கவிருப்பதாக, அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக் கின்றன. எனினும், இதுதொடர்பாக இரு தரப்பிலிருந்தும் முறைப்படி கோரிக்கை விடுக்கப்படவில்லை என்று சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் தெரிவித்துள்ளார். அதேவேளை, சுவீடன், ஃபின்லாந்து, சுவிட் சர்லாந்து, சீனா, மங்கோலியா போன்ற பல நாடுகளின் பெயர்களும் கூறப்படுகின்றது. ஆனால், தற்போது தென் கொரிய அதிபரை கிம் ஜோங்-உன் சந்தித்த - இரு கொரிய நாடுகளுக்கும் இடையிலான பான்முன்



ஜோம் சமாதான கிராமம் தான் வடகொரிய அதிபரின் தேர்வாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின் றனர். எனினும், இந்த எல்லா நாடுகளையும்விட, சிங்கப்பூர்தான் டிரம்ப் - கிம் சந்திப்புக்கு மிக ஏற்ற இடமாகக் கருதப்படுகிறது. பொருளாதார வளமும், உறுதித்தன்மையும் கொண்ட சிங்கப்பூர், அமெரிக்கா, வட கொரியா ஆகிய இரு நாடுகளுடனும் நல்லுறவைப் பேணி வருகிறது. வட கொரியாவுடன் தூதரக உறவைக் கொண்டுள்ள சிங்கப்பூர், அந்த நாட்டின் தலைநகர் பியோங்கியாங்கில் தூதரகத்தை அமைத்துள்ளது. அதுமட்டுமின்றி, பகைமை பாராட்டி வந்த நாடுகளின் தலைவர்கள் சிங்கப்பூரில் சந்திப்பது இது முதல் முறையல்ல. 1949ம் ஆண்டில் சீன உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததற்குப் பிறகு சீனாவுக்கும், தாய்வானுக்கும் கடும் பதற்றம் நீடித்து வரும் நிலையில், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும், தாய்வான் அதிபர் மா யிங்-ஜியோவும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் முதல் முறையாக சிங்கப்பூரில்தான் சந்தித்துப் பேசினர். அந்த வகையில், டிரம்ப்புக்கும், கிம் ஜோங்குக்கும் இடையிலான சந்திப்பும் சிங்கப்பூரில் நடப்பதற்கு அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஈழமுரசு®

# எதுவும் நடக்கப் போவதில்லை எல்லாம் நடந்ததுபோல் இருக்கும்

இந்த உலகம் விசித்திரமானது. இன்று பகையாளியாக இருப்பவர்கள் நாளை நண்பர்களாகவும், இன்று நண்பர்களாக இருப்பவர்கள் நாளை பகையாளியாகவும் மாறும் வினோதம் நிறைந்தது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் மூன்றாம் உலகப் போர் வெடித்துவிடுமோ, அணுகுண்டுகள் இந்தப் பூமியில் மீண்டுமொருமுறை பேரழிவை நிகழ்த்திவிடுமோ என்ற பேரச்சம் இந்த உலகைச் சூழ்ந்திருந்தது. தென் கொரியாவை தரைமட்டமாக்கி சாம்பலாக்கிவிட சில விநாடிகள் போதுமென்ற வட கொரியாவின் சூளுரையும், அமெரிக்காவுடன் இணைந்து தென் கொரியா மேற்கொண்ட முப்படைகளின் பாரிய போர்ப் பயிற்சிகளும் கொரிய தீபகற்பத்தை மட்டுமல்ல இந்தப் பூமிப் பந்தையே போர் மேகங்களால் சூழவைத்திருந்தது. ஆனால் இன்று இரு கொரிய நாட்டின் தலைவர்களும் புன்னகை பூத்தபடி பூக்களைப் பரிமாறிக்கொண்டுள்ளனர். ஒருவரோடு ஒருவர் கட்டித் தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

------------

கடந்த ஆண்டு சீனாவிற்கு இந்தியாவிற்கும் இடையிலான எல்லைப் பகுதிகளில் ஒன்றான டோக்காலாமில் பெரும் பதட்டம் நிலவியது. இரு படைகளும் மோதிக்கொள்ளும் கடுமையான நிலை தோன்றியிருந்தது. சீன - இந்தியப் போர் எப்போது வெடிக்கும் என்ற அச்சம் மேலோங்கியிருந்தது. ஆனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் கடந்த வாரம் வூஹான் மாகாணத்தில் உள்ள பிரபலமான கிழக்கு ஏரியில் நீண்ட படகு சவாரி செய்கின்றனர். அங்குள்ள பூங்காவில் இருவரும் தனியாக அருகருகே நடந்தபடி உரையாடியிருக்கின்றனர். ‘இந்தியாவும், சீனாவும் இணைந்து செயல்பட அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக’ சீன அதிபர் ஜி ஜின்பிங்கிடம் பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றார்.

------------

காலம் மாறுகின்றது. உலகமும் மாறிக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாடும் தன் பிராந்திய, பொருளாதார நலன்களுக்கு ஏற்ற வகையில் தம்மை மாற்றிக்கொண்டு வருகின்றன. சர்வதேச அளவில் ஏற்பட்டு வருகின்ற இந்த மாற்றங்கள் உலக மக்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடியவையாக அமைந்திருக்கின்றன. ஆனால், சிங்களம் இன்னும் மாறவேயில்லை! இனிமேலும் அது மாறப்போவதில்லை. மாறும் என்றும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமுமில்லை.

போர் முடிவடைந்து இத்தனை ஆண்டுகளில் ஏற்படாத மாற்றம், ஆட்சிகளும் மாறி நல்லாட்சி எனும் மகுடங்களும் சூடிக்கொண்டபிறகு ஏற்படாத மாற்றம் இனியும் நிகழும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கமுடியாது. ஏனெனில், “சிங்கள தேசத்திலே கடந்த அறுபது ஆண்டுகளாக நிகழாத அரசியல் மாற்றம், இனிவரும் காலங்களில் நிகழ்ந்துவிடப் போவதுமில்லை, அப்படி நம்பி ஏமாறுவதற்கு எமது மக்களும் தயாராக இல்லை.” என்று தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களே கடந்த 2008ம் ஆண்டு மாவீரர் தின உரையில் கூட மிகவும் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டுவிட்டார்.





எனவே, மாறாத இந்தச் சிங்கள தேசம் தமிழர்களுடன் புன்னகை பூத்தபடி பூக்களைப் பரிமாறிக்கொள்ளும் என்றோ, ஏரியில் ஒன்றாக படகுச் சவாரி செய்யும் என்றோ எதிர்பார்க்கமுடியாது. இந்த உலகை ஏமாற்ற அது எவ்விதமான ஏமாற்று நரித் தனத்தையும் முன்னெடுக்கும்.

தமிழ் மக்களின் நிலங்களை இராணுவம் விடுவிக்கும் நிகழ்வை பெருமெடுப்பில் காவடி தூக்கவைத்துக் கொண்டாட்டமாகச் செய்யும். கொண்டாட்டங்கள் முடிந்தபின்னர் அந்த நிலங்களை மீண்டும் தனது படைகளைக் கொண்டே ஆக்கிரமித்துக்கொள்ளும். இராணுவ வசம் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளின் அளவைக் குறைத்துக்கூறி உலகை ஏமாற்ற கடுமையாக முனையும். காணாமல்போனவர்கள் எவரும் இல்லை எனக் கூறிக்கொண்டே, காணாமல்போனவர்களை கண்டறிவதற்கான அலுவலகத்தை அமைக்கும். இதன் மூலம் யாரும் கண்டுபிடிக்கப்படபோவதில்லை என்பது உறுதியாகத் தெரிந்தும், சர்வதேசத்தை ஏமாற்றி காலத்தை இழுத்தடிப்பதற்கான இன்னொரு வழியாக இந்தக் காணாமல்போனோர் அலுவலகத்தைப் பயன்படுத்தும்.

விசாரணையின்றியும் காலவரையின்றியும் தமிழ் இளைஞர்களை சிறைகளில் தடுத்து வைத்திருக்கின்றது. தங்கள் விடுதலைக்காக இதுவரை அந்த அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பில் இருந்து சாத்வீக வழியிலான அத்தனை போராட்டங்களையும் சிறைகளுக்குள் இருந்தபடியே முன்னெடுத்துப் பார்த்துவிட்டனர். அவர்களின் உறவுகளும் சிறைகளுக்கு வெளியில் பல்வேறு வழியிலான போராட்டங்களை முன்னெடுத்துவிட்டனர். ஆனால், கடந்த வாரம் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்கு பிரித்தானியா வந்திருந்த மைத்திரிபால சிறீசேன, பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில், இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறுகின்றார். நாட்டில் எவ்வித இரகசிய முகாம்களும் இல்லை என்று கூறி காணாமல் போனோர்களின் தேடல்களுக்கும் ஒரேயடியாக முற்றுப் புள்ளி வைக்க முனைந்துள்ளார்.

எனவே, கொரியத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட மனமாற்றத்தைப் போன்றோ, இந்திய - சீனத் தலைவர்களுக்கு இடையே ஏற்பட்ட புரிந்துணர்வைப் போன்றோ எந்தவொரு மாற்றமும் சிங்களத்திடம் நிகழ்ந்துவிடப்போதில்லை. சிங்களத்தின் எந்தத் தலைவர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களுக்கு எதுவும் நடக்கப் போவதில்லை. ஆனால், எல்லாம் நடந்ததுபோல் இந்த உலகிற்கு ‘மாய காட்சிப் பிம்பம்’ ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும். அதற்குச் சில தமிழ்த் தலைமைகளே துணையும் போவார்கள். இதுவே நேற்றும் நிகழ்ந்தது. இதுவே இன்றும் நிகழ்கின்றது. இதுவே நாளையும் நிகழும்.

“சிங்கள ஆட்சியாளர்கள் எப்போதும் தமது ஆதிக்கத்தின் கீழ் மற்றைய இனத்தவர் அடிபணிந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்படுகின்றார்கள். அதனாலேயே, இன்றும் இப்பிரச்சினை முடிந்தபாடில்லை. தமிழரசு என்பதும், இன்னும் உருவாகவில்லை. எவ்வாறாயினும், தமிழர் தாயகத்தை நாம் மறந்து விடமுடியாது. தற்போதைய அரசாங்கத்தை, பல்வேறு வகையிலும் நிர்ப்பந்திக்க வேண்டியிருக்கிறது.”

இவ்வாறு சொன்னது வேறு யாருமல்ல யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தந்தை செல்வாவின் நினைவு தினத்தில் உரையாற்றிய சிங்களப் பேரினவாதத்தை சேர்ந்தவர்களில் ஒருவரும் நவ சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணதான்.

மாற்றம் மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதமும் தன் இனவாதத் திமிர்த்தனத்தில் இருந்து என்றுமே மாறாது.

## மக்களின் கருத்தை மாற்றும் சக்தி நாளிதழ் கட்டுரைகளுக்கு உண்டு

### - அமெரிக்க ஆய்வில் தகவல் -

நாளிதழ்களில் தலையங்கப் பக்கத்துக்கு எதிரே வெளியாகும் கட்டுரைகளுக்கு மக்களின் கருத்தை மாற்றும் சக்தி உள்ளது என்று அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வில் தெரியவந்துள்ளது.



The New York Times

NEW YORK, MONDAY, APRIL 24, 2017

Voters Embrace Outsi... In Election to Lead Fr...

Parties Unify to Stop Far Right: 'This Is Deadly Serious'

நாளிதழ்களில் தலையங்கம் மற்றும் அதற்கு அடுத்த பக்கங்களில் அப்போதைய அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்னைகள் குறித்து கட்டுரைகள் வெளியாவது வழக்கம். இந்தக் கட்டுரைகளுக்கு பெருவாரியான வாசகர்களும் உண்டு. இந்நிலையில் நாளிதழ்களில் வெளியாகும் இந்தக் கட்டுரைகள் மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது குறித்து அமெரிக்காவில் இருந்து வெளியாகும் அரசியல் அறிவியல் பத்திரிகை ஆய்வு நடத்தியது. அமெரிக்காவைச் சேர்ந்த ‘நியூயோர்க் ரைம்ஸ்’ உள்ளிட்ட முன்னணி நாளிதழ்கள், இதில் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: தொடக்கத்தில் ஒரு சில நாளிதழ்களில் மட்டுமே தலையங்கப் பக்கத்திலும், அதன் எதிர்ப்பக்கத்திலும் கட்டுரைகள் வெளியாகி வந்தன. ஆனால், இப்போது அந்தக் கட்டுரைகளின் முக்கியத்துவத்தை

தொடர்ச்சி 18ம் பக்கம்

## விக்கினேஸ்வரனின் புதிய கட்சிக்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு

### - கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு -

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனிக் கட்சி ஒன்றை ஆரம்பித்து கொள்கை பற்றுடன் செயற்படுவாராக இருந்தால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதனை வரவேற்கும் எனத் தெரிவித்திருக்கும் அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்தேசிய கூட்டமைப்பின் கொள்கையே இன்றைக்கு தமிழ்தேசத்தின் சாபக்கேடாக மாறியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனிக் கட்சி ஒன்றை உருவாக்க உள்ளதாக வெளியான செய்தி தொடர்பாக கேட்டபோதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த விடயம் குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில், முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகி தனியான கட்சி ஒன்றை உருவாக்க உள்ளதாக அறிகின்றோம். அந்த தகவல் உண்மையாக இருந்தால் அதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வரவேற்கிறது. மேலும் முதலமைச்சர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் வந்த முதலமைச்சராகவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினராகவும் இருந்தவர். ஆகவே கூட்டமைப்பின் கொள்கைகளுடன் முரண்பட்டாலும் முதலமைச்சர் கூட்டமைப்பின் முதலமைச்சராகவும்,

தொடர்ச்சி 18ம் பக்கம்

## யஸ்மின் சூகா இலங்கைக்கு வருகை!

ஐ.நா. பொதுச் செயலரால் இலங்கை தொடர்பில் விசாரிக்க அமைக்கப்பட்ட குழுவில் பணியாற்றிய யஸ்மின் சூகா, இம் மாதம் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறீ




லங்கா அரசின் அழைப்புக்கு அமைவாகவே அவர் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகள், குற்றச் செயல்களுக்குபொறுப்புகூறாதநிலைமை நீடித்தல் என்பன தொடர்பில் பன்னாட்டு அரங்கில் தொடர்ச்சியாக சூகா குரல் கொடுத்து வருகின்றார்.

## பொங்கு தமிழ் நினைவுத்தூபி!

யாழ்ப்பாணப் பல்கலைகழக வளாகத்துக்குள் பொங்கு தமிழ் எழுச்சி நாள் நினைவாக பெயர் பலகை அமைக்கப் பட்டிருத்த இடத்தில் புதிதாக நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. தமிழீழ விடுதலை புலிகள் காலத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி நாளாக பொங்கு தமிழ் எழுச்சி நாள் இடம்பெற்றது. பொங்கு தமிழ் எழுச்சி நாளை கொண்டாடியமைக்காக பல இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பொங்கு தமிழ் எழுச்சியில் அளப்பரிய பங்காற்றிய யாழ்ப்பாணப் பல்கலைகழக வளாகத்தில் நினைவுப் பெயர் பலகை ஒன்று வைக்கப்பட்டது. அந்த இடத்தில் தற்போது நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

## கைவிடப்பட்ட சிசு உயிரிழப்பு!

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அருகில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட சிசு உயிரிழந்துள்ளது. கடந்த



ஜனவரி மாதம் மீட்கப்பட்ட சிசு, கிளிநொச்சி வைத்தியசாலையால் பராமரிக்கப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்து விட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. சிசுவின் பெற்றோர் அடையாளம் காணப்படாமையால், உரியவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. இதேவேளை உயிரிழந்த சிசுவின் சடலத்தைப் பொறுப்பேற்க பெற்றோர், உறவினர்கள் யாராவது முன்வரும் பட்சத்தில் அவர்களிடம் சடலத்தைக் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அழியும் தமிழர் தேசம் 18

## சட்டவிரோத மணல் அகழ்வு கிளாலியில் மீளவும் ஆரம்பம்!

கிளாலியில் சட்டவிரோதமாக மணல் கடத்துவது தடுக்கப்பட்டிருந்தபோதும், அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கிளாலிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான



காணிகளிலிருந்து சட்டவிரோதமாக தினமும் மண் கடத்தல் இடம்பெறுகிறது.

இது குறித்துப் பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக மண் அகழ்வு சில வாரங்களாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றுபவர்கள் நன்கு திட்டமிட்டு மணல் கடத்தும்போது அதிகாரிகளும் நன்கு திட்டமிட்டு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும், ஆலோசனை கூறவேண்டும் என்று கோருகின்றனர்.

இந்தநிலைப்பாடு குறித்துக் கவலை தெரிவித்துள்ள பிரதேச மக்கள் மண் அகழ்வால் பாரதூரமான பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்றும் சட்டவிரோத மணல் கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர். அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

## ஐ.நா. அமைதிப்படையில் இனப்படுகொலை இராணுவம் 161 மில்லியன் டொலர் வருமானம்

## சிறீலங்காப் படையினர் தொடர்பில் ஐ.நா எச்சரிக்கை

ஐ.நா அமைதிப்படை நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம், இராணுவம் இதுவரை 161 மில்லியன் டொலர் வருமானத்தைப் பெற்றுள்ளது என்று சிறீலங்கா இனப்படு கொலை இராணுவத்தின் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். வெளிநாடுகளில் ஐ.நா அமைதிப்படைகளில் பணியாற்றும் சிறீலங்காப் படையினர் மூலம், 2004ம் ஆண்டு தொடக்கம், ஆண்டு தோறும் குறைந்தது 2.5 மில்லியன் டொலர் வருமானம் பெறப்படுகிறது. இதுவரை இராணுவத்தைச் சேர்ந்த, 18,179 படையினர் வெளிநாடுகளில் ஐ.நா. அமைதிப்படைக்காக பணியாற்றியுள்ளனர். தற்போது, லெபனான், தென்சூடான், மாலி, அபேயி, நியூயோர்க், மத்திய ஆபிரிக்க குடியரசு, மேற்கு சகாரா, உள்ளிட்ட இடங்களில் இராணுவத்தினர் ஐ.நா. அமைதிப் படையினர் பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் பணியாற்றுவதற்காக, லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட்ட, 49 சிறீலங்கா இராணுவத்தினர் தொடர்பிலான ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்படுமாறு அமைதிகாக்கும் படையின் பேச்சாளர் சிறீலங்கா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஊடாக ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் துரித கதியில் நடிவடிக்கை எடுக்க வேண்டுமென, பேச்சாளர் நிக்கி பர்ன்பெக் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் சிறீலங்கா அரசாங்கம் கரிசனை காட்டுமென தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிடின், 49 சிறீலங்காப் படையினரை, திருப்பி அழைக்குமாறு அரசாங்கத்திடம் கோரப்படுமெனவும், அரசாங்கத்தின் செலவிலேயே அவர்களுக்கு பதிலாக வேறு நபர்களை அனுப்பும் நிலையும் அரசாங்கத்திற்கு ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

**விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு!**

உந்துருளி தலையில் அடித்து மயங்கிய நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஐந்து நாள்களின் பின்னர் கடந்த 24ம் திகதி செவ்வாய்க்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். கரவெட்டி, கிழவித்தோட்டம் பகுதியைச் சேர்ந்த தி.கவிராஜ் (வயது–24) என்பவரே உயிரிழந்தவராவார். கவிராஜ் கடந்த 19ம் திகதி பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி நோக்கி உந்துருளியில் சென்றபோது, நெல்லியடியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றின் முன்பாக வீதியோரம் நிறுத்த முற்பட்டபோது தனது உந்துருளியுடன் நிலத்தில் வீழ்ந்தார். அதிவேகமாக வந்த மற்றுமொரு உந்துருளியின் பாகமொன்று கவிராஜின் தலையில் மோதியது. அதில் பலத்த காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். ஐந்து நாள்களாக சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**உயிரைப் பறித்தது அதிவேகப் பயணம்!**

யாழ்ப்பாணம் – மன்னார் வீதியூடாக பயணித்த உந்துருளியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின்கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த 23ம் திகதி திங்களன்று காலை யாழ்ப்பாணம் – தென்மராட்சி ஏ–35 வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்–துக்கு அருகில் நடந்துள்ளது. கட்டப்பிராயைச் சேர்ந்த விஜயரத்தினம் பிரசாத் (வயது–23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த குணராசன் திருக்குமரன் (வயது 27) என்பவர் காயமடைந்தார்.

**விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு!**

வாகனத்துடன் மோதுண்டு காயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி மூன்று தினங்களின் பின்னர் உயிரிழந்தார். கடந்த 12ம் திகதி இரவு 7 மணியளவில் கள்ளுத் தவறணைக்கு கள்ளுக் கொடுக்கச் சென்றபோது வாகனத்தினால் மோதுண்டு சாலையோரத்தில் தூக்கி வீசப்பட்ட மிருசுவில் கரம்பகத்தைச் சேர்ந்த கந்தசாமி தயாளன் (வயது 42) என்பவரே கொடிகாமம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

**காணாமல்போன இரு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு!**

மட்டக்களப்பு – இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையொருவர் கடந்த 15ம் திகதி இரவு முதல் காணாமல்போயுள்ளதாக மட்டக்களப்பு சிறீலங்கா காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு தேடப்பட்டுவந்த நிலையில் குறித்த குடும்பஸ்தர் 16ம் திகதி மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு இருதயபுரம் மேற்கு பகுதியைச் சேர்ந்த தங்கவேல் ஜெயராஜ் (வயது 49) என்ற குடும்பஸ்தரே மட்டக்களப்பு சின்ன உப்போடை வாவிக்கரை பகுதியில் கரையொதுங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த குடும்பஸ்தர் வாகன சாரதியாக தொழில் புரிபவரெனவும் இரு பிள்ளைகளின் தந்தையெனவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

**உதைபந்தாட்டம் ஆடிய இளைஞன் மரணம்**

உதைபந்தாட்ட போட்டியில் கலந்து கொண்டிருந்த வீரர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் யாழ். அரியாலைப் பகுதியில் கடந்த 21ம் திகதி இடம்பெற்றுள்ளது. ஊர்காவற்றுறை முகாம் வீதியை சேர்ந்த இலங்கை மின்சாரசபை ஊழியரான மதியழகன் பத்மராசா (வயது 27) என்பவரே மேற்படி பரிதாபமாக உயிரிழந்தவராவார். இலங்கை மின்சார சபை வடக்கு மாகாண ஊழியர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியின் நான்காவது சுற்று போட்டி அரியாலை சன சமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த போட்டியில் கலந்து கொண்ட மேற்குறித்த இளைஞன் பந்தை காலால் வேகமாக உதைத்துள்ளார். உதைத்த மறுகணமே அவ்விடத்தில் மயக்கமடைந்து கீழே விழுந்துள்ளார். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

**7 பிள்ளைகளின் தாய் தீயில் எரிந்து உயிரிழப்பு!**

நீண்டகாலமாக மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த 7 பிள்ளைகளின் தாய் தனக்குத் தானே தீயிட்டு, எரி காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, உயிரிழந்தார். அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் சாந்தகுமாரி (57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி 18ம் பக்கம்




சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 06 58 75 05 09
CITY EXPRESS We Move the Businessclass
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# உறவினர்களை நினைவுகூரவும் தடைபோடும் சிங்களப் பேரினவாதம்!

**‘தாயகத்தில் இருந்து’ காந்தரூபன்**



யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைப்பதற்கு மாணவர்கள் எடுத்த முயற்சி சிறீலங்கா அரசின் உயர்மட்ட உத்தரவு மூலம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தூபி அமைக்கும் பணி இனித் தொடருமா அல்லது அப்படியே கிடப்பில் போடப்படுமா என்பது தெளிவற்ற நிலையில் உள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்திற்கு புத்துயிர் கொடுத்த ஓர் உயர் கல்விப்பீடம். உலகின் எந்த இடத்தில் உள்ள தமிழ் மக்களாயினும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கருத்திற்கு மதிப்பளிப்பர். ஈழப்போராட்டத்திற்கு பங்களித்ததன் மூலம் அந்த உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தது யாழ். பல்கலைக்கழகம்.

ஈழத்தமிழ் மண்ணில் தேர்தலோ, மக்கள் அணிதிரள்வு நிகழ்வோ, பொதுப் பேரணிகளோ இவற்றை யார் நடத்தினாலும் அதில் தாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை தீர்மானிக்க முன்னர், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ன முடிவை அறிவிக்கின்றது என தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பர். அந்த அறிவித்தலுக்கு பின்னர்தான் முடிவை எடுத்துக்கொள்வர். குறிப்பாக 1990 களுக்கு பிற்பட்ட தமிழர் நிலைப்பாடு இதுவாகத்தான் இருந்தது.

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் பெரும்பாலும் 25 வயதிற்கு குறைந்தவர்கள். தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான அனுபவம் அவர்களிடம் குறைவாகவே இருக்கும். முடிவெடுக்கும் தன்மையில் அவர்கள் சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடும். இவ்வாறான நிலையிலும் அவர்களின் கருத்திற்கு தமிழீழ மக்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். பல்கலைக்கழக மாணவர்கள் அறிக்கை விடுத்தால் அதை தலைமேற்கொண்டு செயற்படும் மனப்பான்மை தமிழ் மக்களுக்கு இருந்தது.

அதற்கு ஏற்றாற்போல அன்று தொடக்கம் இன்றுவரை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது தேசியப்பற்றை வெளிப்படுத்தத் தவறுவதில்லை. எப்போது எதைச்செய்ய வேண்டுமோ அதை அவர்கள் தவறாது செய்து வருகின்றனர்.

கடந்த காலங்களில், யுத்தம் தீவிரம் பெற்றிருந்தபோது யாழ். பல்கலைக்கழகம் தமது பணியை மிகவும் நேர்த்தியாக வெளிப்படுத்தியது. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு முன்பாக 2005 ஆம் ஆண்டு மாவீரர் நினைவுத் தூபி அமைக்கப்பட்டது. மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட அந்தத் தூபிக்கு முன்பாகவே மாவீரர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டு வந்தன.

மேலும், பொங்குதமிழ் நினைவை முன்னிட்டு பொங்குதமிழ் பிரகடனம் அடங்கிய பாரிய பதாகை (கட்அவுட்) வைக்கப்பட்டது. இவற்றில் மாவீரர் நினைவிடம் படையினரால் சேதமாக்கப்பட்டது. எனினும் தற்போது அது மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது. பொங்குதமிழ் பிரகடனமும் மெருகூட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதற்கும் மாணவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். முதலில், பல்கலைக்கழகக் கலைப்பீட வாயிலில் இதை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் அதிருப்தியடைந்த பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களை அழைத்துக் கலந்துரையாடியது. முள்ளிவாய்க்கால் முற்றத்தை அமைக்க வேண்டாம் எனக் கூறியது.

ஆனால், எமது பல்கலைக்கழகம் தனியே கல்வியை மட்டுமன்றி, தமிழ் மக்களுக்கு வழிகாட்டுதல்களையும் மேற்கொள்ளும் அறிவுக்கூடம் என்பதை பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எடுத்துரைத்த மாணவர்கள், எமது மக்களின் அவலங்களை நாம் வெளிப்படுத்த அனுமதிக்கவேண்டும் என உறுதியாக நின்றனர். நிர்வாகத் தரப்பின் மறுதலிப்புக்கள் இருந்தபோதிலும் மாணவர்களின் மனவுறுதிக்கு முன் நிர்வாகத்தால் தடை போட முடியவில்லை. இறுதியில் இடமாற்றத்தைக் கோரினர்.

அதாவது, பல்கலைக்கழக வாயிலைத் தவிர்த்து, ஏற்கனவே மாவீரர் நினைவிடம் உள்ள இடத்திற்கு சமீபமாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை அமைக்குமாறு நிர்வாகம் பணித்தது. அதற்கு ஏற்ப மாணவர்கள் அங்கு வேலைகளை மேற்கொண்டனர்.

தூபிக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேகமாக நடைபெற்றுவந்த நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியன மேற்படி நினைவிடத்தை அமைப்பதற்குத் தடை விதித்துள்ளன.

**மாணவர்கள் மன அழுத்தம் இன்றி மகிழ்ச்சிகரமாகக் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது பல்கலைக்கழக நிர்வாகத்தின் கடமை. அந்தக் கடமையில் இருந்து பல்கலைக்கழக நிர்வாகம் விலகிச்செல்ல முடியாது.**

பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுவரும் இந்த நினைவுத் தூபியின் பணிகளை உடனடியாக நிறுத்துமாறும் அதை இடிக்கவோ மேலும் அமைக்கவோ வேண்டாம் எனவும் மேற்படி உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, மேற்படி உத்தரவின்படி இனிமேல் இந்த நினைவுத் தூபியை எழுப்ப முடியாது.

மாணவர்கள் மன அழுத்தம் இன்றி மகிழ்ச்சிகரமாகக் கற்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது பல்கலைக்கழக நிர்வாகத்தின் கடமை. அந்தக் கடமையில் இருந்து பல்கலைக்கழக நிர்வாகம் விலகிச்செல்ல முடியாது.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## புராதன ஆலயம் சிதைந்த நிலையில் கண்டுபிடிப்பு!

அம்பாறையில் 12ம் நூற்றாண்டுக்குரிய சோழர் காலத்திற்குரியதென நம்பப்படும் புராதன ஆலயமொன்று சிதைந்த நிலையில் மடத்தடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரிவிலுள்ள மாட்டுப்பளை எனுமிடத்தில் வயல்வெளிகளால் சூழப்பட்டு மனோரம்மியமான சோலைக்கு மத்தியில் அமைந்துள்ள மடத்தடி மீனாட்சி அம்மனாலயத்திற்கு அருகில் இந்த ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





சிதைந்த ஆலயத்தையும், அருகிலுள்ள தீர்த்தக்குளத்தையும் பாம்புகள் வாழும் புற்றினையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். 14 அங்குல செங்கற்களாலான இவ்வாலய சிதைவுகளுடன் சுற்றவரவுள்ள கட்டடத்தின் ஒருசில பகுதிகள் காணப்படுகின்றன. காடுமண்டி மரம் புற்களுக்கு மத்தியில் செடி கொடிகளுக்கிடையில் இவ்வளவுகாலமும் இப்புராதன ஆலயம் மறைந்திருந்துள்ளது.

## வருடத்தில் 36,500 கருக்கலைப்புக்கள்

இலங்கையில், வருடமொன்றுக்கு 35 ஆயிரத்து 500 குழந்தைகள் பிறக்கின்ற அதேவேளை, 36 ஆயிரத்து 500 கருக்கலைப்புகள் இடம்பெறுகின்றன என்று மருத்துவர் மெக்ஸி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இலங்கை கத்தோலிக்கச் சபையின் ஏற்பாட்டில், பொரளையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,



இலங்கையில் சுமார் ஆயிரம் சட்ட விரோத கருக்லைப்புகள் இடம்பெறுகின்றன. சட்ட விரோத கருக்கலைப்புகள் அங்கீகரிக்கப்படாத இடங்களில், தகுதியற்ற நபர்களாலும் இவை மேற்கொள்ளப்படுகின்றன. நாடளாவிய ரீதியில் சுமார் 40 ஆயிரம் சட்விரோத கருக்கலைப்பு மருத்துவர்கள் செயற்படுகின்றனர். அரச மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் இவ்வாறான கருக்கலைப்புக்கள் நிகழ்த்தப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## இலங்கை வரைபடத்தில் நிலவளவு அதிகரிப்பு

கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் காரணமாக இலங்கையின் வரைபடத்தில் 2.69 சதுர கிலோ மீற்றர் அதிகரித்துள்ளதாக சிறீலங்கா நிலஅளவையாளர் பீ.என்.பீ.உதயகாந்த தெரிவித்துள்ளார். புதிய இலங்கை வரை படத்தின்படி சிலா



பம் கடற்கரைப் பிரதேசம் குறைவடைந்துள்ளதாகவும் நாட்டின் தெற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பிரதேசம் மாறுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதிய துறைமுக நகரத்திட்டம் காரணமாக மாறுபடும் கொழும்பு வரைபடத்தை அச்சிடும் நடவடிக்கைகள் இம்மாதம் இறுதிக்குள் முடிவடையும் எனவும் அளவையாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது.

## புத்தரின் பல்லை, இலங்கைக்கு அனுப்ப மறுப்பு!

தமிழகத்தின் எம்.எஸ். பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ள கௌதம புத்தரின் புனித நினைவுப்பொருட்களை இலங்கைக்கு தற்காலிகமாக அனுப்பும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

த டைம்ஸ் ஒப் இந்தியா இதனைத் தெரிவித்துள்ளது. சிறீலங்கா அரசாங்கம் இந்தியாவின் தேசிய நூதனசாலையிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, குறித்த புனிதப்பொருட்களை இலங்கைக்கு தற்காலிகமாக வழங்குமாறு, பல்கலைக் கழகத்திடம் கோரப்பட்டது. ஆனால் இதற்கு பல்கலைக்கழகம் மறுப்பு தெரிவித்ததாக தெரிவிக்கப்படுகிறது. இந்திய தேசிய நூதனசாலையினால் இலங்கைக்கு புத்தரின் வேறு புனித நினைவுப் பொருட்கள் அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப்பொருட்கள் எதிர்வரும் 30ம் திகதி முதல் இலங்கையில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக அறியமுடிகிறது.

## மாபெரும் இளைஞர் மாநாடு

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் இளைஞர் மாநாடு ஒன்று மிக விரைவில் நடைபெறவுள்ளது. வடமாகாணத்து இளைஞர்களை முதன்மைப்படுத்தி யாழ்ப்பாணத்தில் இளைஞர் மாநாடு ஒன்றை நடத்துவதற்கான விசேட செயலணி ஒன்றும் தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்டுள்ளது. ஊழல் அற்ற அரசியல் என்ற தொனிப்பொருளில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இளைஞர் மாநாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இளைஞர்களை திசைமுகப்படுத்தும் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார். தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒரு புதிய சிந்தனையை ஏற்படுத்தி அதன் ஊடாக வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம், தமிழ் பண்பாடு மற்றும் கலை, கலாசார விழுமியங்கள் என அனைத்து தளங்களிலும் இளைஞர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான அத் தனை ஏற்பாடுகளும் திட்டமிட்டு வருவதாக பேரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'கிழக்கில் இருந்து' எழுவான்

# பால்பண்ணைத் தொழிலாளிகளின் வாழ்வைப் பாதிக்கும்

## சிறீலங்கா வனஜீவராசி மற்றும் வனப்பாதுகாப்பு அதிகாரிகள்




கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்களின் 90 வீதமானவர்கள் விவசாயம், மீன்பிடி, கால்நடை, காட்டுத் தொழில் என செய்து தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டுவருகின்றனர். யுத்தம் நடைபெற்ற காலங்களில் இந்தத் தொழில்கள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டது. எனினும் யுத்தம் முடிந்த பின்னரும் இத்தொழில் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மாவட்டத்தின் கோறளைப்பற்று தெற்கு கிரான், கோறளைப்பற்று, ஏறாவூர்ப்பற்று செங்கலடி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்கின்ற மக்கள் விலங்கு வேளாண்மையில் கூடிய கவனம் எடுத்துவருகின்றனர். இத் தொழிலை அவர்களின் தலைமுறை தலைமுறையாக செய்துவருகின்றனர். ஆனால், இவர்களின் கால்நடைகளை மேய்ப்பதற்கு என ஒரு நிரந்தரமான இடம் இல்லை.

1979 ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லை பகுதியில் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மைலத்தமடு, மாதவணை மற்றும் பெரிய மாதவணை ஆகிய இடங்களில் கால்நடைகளுக்கு என சுமார் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. தற்போது இவற்றை மேய்ப்பதில் பலபிரச்சினைகளை பண்ணையாளர்கள் எதிர்நோக்கியுள்ளனர். இதற்கென ஒதுக்கப்பட்ட காணியை வனவளப்பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் வனஜீவராசி அதிகாரிகள்பெரும் தடைகளை போடுகின்றனர். இப்பகுதியில் இருந்து கால்நடைகளை உடனடியாக வெளியேற்ற வேண்டும் எனவும் அச்சுறுத்துகின்றனர்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் காட்டு வளம் பேணிப் பாதுகாக்கப்பட்டது. அந்த காலத்தில் கால்நடைகள் தொழில் சிறப்பாக இடம்பெற்றது. பண்ணையாளர்களும் பொருளாதார ரீதியாக செழிப்பாக இருந்தனர். இன்று பொலநறுவை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து செல்லும் சிங்களவர்கள், இந்த நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். அதாவது, அவர்கள் இங்குள்ள காட்டு வளங்களை முற்றாக அழித்து பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். இதனால் கால்நடைகளுக்கான புல் முற்றாக அழிக்கப்படுகிறது. அதுமாத்திரமல்ல கால்நடைகளையும் அழிக்கின்றனர்.

அத்துமீறி பயிர்ச் செய்கையில் ஈடுபடும் சிங்களவர்களினால் கால்நடைகளுக்கென ஒதுக்கப்பட்ட மேச்சல்தரை பகுதியில் வைத்து கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படுகிறது. இதுவரைக்கும் 88 கால்நடைகள் இறந்துள்ளன. மேலும் 150க்கும் மேற்பட்ட மாடுகள் உபாதைகளுக்கு உள்ளாகியுள்ளன. அத்துடன், சிங்கள இனத்தவர்கள் இரவு வேளையில் கால்நடைகளை திருடுகிறார்கள்.

கடந்த வருடம் ஆடுகளை திருடுவதற்காக வந்தவர்கள், பண்ணையாளர்களின் செல்பேசிகளை திருடிச் சென்றார்கள். அத்துடன், கால்நடைகளுக்கு சுருக்கு வைத்தல், கால்நடைகளை கட்டிப்போடுதல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக காவல்துறையில் முறைப்பாடு செய்தாலும் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை.

கடந்த (30.01.2018) கால்நடைகளுக்கான மேச்சல்தரை பகுதியில் இனம் தெரியாத நபர்கள் கால்நடைகளுக்கு சுருக்கு வைத்துள்ளனர். இது தொடர்பாக கரடியனாறு காவல்துறையினரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து, சுருக்குகள் அனைத்தையும் எடுத்து வைக்குமாறு காவல்துறையினர் பண்ணையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சுருக்குகள் அனைத்தையும் எடுத்து வாடியில் வைத்துவிட்டு மாடுகளை மேய்க்கச் சென்றுவிட்டார்கள். அன்று மாலையில் மீண்டும் மாடுகளை கட்டு இடத்திற்கு கொண்டு சென்றபோது, வன ஜீவராசிகள் பிரிவினர் 8 பேரை கைது செய்தனர். ஏன் கைது செய்கிறீர்கள் என வினாவிய போது, உங்கள் இடத்தில் காட்டு விலங்குகளை பிடிக்கும் சுருக்குக் காணப்பட்டதால் கைது செய்கிறோம் எனக் கூறினர்.

கால்நடைக்கு சுருக்கு வைத்தமை தொடர்பாக நாங்கள் காவல்துறையில் முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள்தான் அந்த சுருக்கை எடுத்து வைக்குமாறு எமக்குத் தெரிவித்தனர் எனக் கூறியதையடுத்து 7 பேரை அவ்விடத்திலே வைத்து விடுதலை செய்தனர். எனினும் ஒருவரை மட்டும் அரலகந்வெல பகுதியிலுள்ள வனஜீவராசிகள் அலுவலகத்திற்கு கொண்டு சென்று பிணையில் விடுதலை செய்யப்பட்டதாக பண்ணையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கு (05.02.2018) அன்று அரலகந்வெல பகுதி நீதிமன்றில் இடம்பெற்றது. இதன் போது, குறித்த பகுதி கால்நடை மேச்சலுக்கான பகுதிக்கான ஆதாரக் கடிதம், கால்நடைகள் மேப்பதற்கான அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம் போன்றவற்றுடன் சென்றுள்ளனர். இவ்வாறான ஆவணங்கள் எதனையும் பார்வையிடாது, இப்பகுதி வனஜீவராசி திணைக்களத்திற்குச் சொந்தமானது யார் இப்பகுதிக்கு கால்நடைகளை கொண்டுவரச் சொன்னது என கேட்டு அவர்களை குற்றவாளிகளாக காண்பித்து 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்தி விடுதலையாகியுள்ளனர்.

தற்போது, கால்நடைகளை மேய்ப்பதற்கு புதிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட குறித்த பகுதியை சிங்களப் பகுதியுடன் இணைந்ததாக காண்பித்து இங்கு கால்நடைகளை கொண்டுவரக் கூடாது என எச்சரிக்கின்றனர்.

**இது தொடர்பாக விவசாய அமைச்சரான தமிழரசுக் கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினர் கி.துரைராஜசிங்கம் அவர்களிடம் முறையிட்ட போது இப்போதைக்கு இப்பிரச்சினைகளை பார்க்க முடியாது எனக் கூறியுள்ளார்.**

தொடர்ச்சி 18ம் பக்கம்

# ஒப்ரேசன் டமில் எட்ஜ்: 8

# மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி
சேரமான்

"நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைப்பதற்கு உங்களுக்கு கூட்டமைப்பின் இரண்டு எம்.பிமார் மட்டும் தான் ஆதரவு என்றால், எப்படி ஏனைய எம்.பிமாரின் ஆதரவைப் பெறப் போகிறீர்கள்?"

இவ்வாறு கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவர் கேட்ட பொழுது எந்தத் தயக்கமும் இன்றி கே.பி கூறினார்: "இது நாங்கள் உங்களுக்கு உதாரணத்துக்குச் சொன்னது. இன்னும் சில எம்.பிமாரோடையும் எங்களுக்குத் தொடர்பு இருக்கு. சண்டை நடந்த கடைசி நாட்களிலை கூட்டமைப்பின் இன்னொரு எம்.பி ஒருவர் ஊடாக பசில் ராஜபக்சவோடையும் நான் கதைச்சனான். அப்படி எங்களுக்கு வெவ்வேறு வழிகளில் வெவ்வேறு ஆட்களோடு தொடர்பு இருக்கு. ஆனால் கூட்டமைப்பை மட்டும் நாங்கள் நம்பியிருக்க முடியாது. மற்றைய கட்சிக்காரர்களோடு நாங்கள் உறவை வைச்சிருக்க வேண்டும்."

## டக்ளசுடன் ஒரே தட்டில் உணவருந்திய கே.பி





மற்றைய கட்சிக்காரர்கள் என்று கே.பி யாரைக் குறிப்பிடுகின்றார் என்பதைப் புரிந்து கொள்வதென்பது கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவருக்கு அவ்வளவு கடினமான ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் என்ற கோதாவில் தன்னுடன் உரையாடியவாறு கே.பி இப்படிக் கூறியதுதான் அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. தனது புருவங்களை உயர்த்தி அதிர்ச்சியுடன் கே.பியை அவர் நிமிர்ந்து பார்த்தபொழுது கே.பி கூறினார்:

"சண்டை தீவிரமடைஞ்சவுடன் நான் எல்லாரோடையும் தான் கதைச்சனான். ஏன் இப்ப அமைச்சராக இருக்கிற ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தாவுடன் கூட கடைசி நாட்களில் நான் அடிச்சுக் கதைச்சனான். ருத்ராவிடம் சொல்லி, பொபி மூலமாக புளொட் தலைவர் சித்தார்த்தனோடையும் கூட கதைச்சனான். சண்டையை நிற்பாட்டுவதற்காக நான் கதைக்காத ஆட்கள் ஒருத்தரும் இல்லை. அந்த அளவுக்கு நான் கடும் முயற்சி எடுத்தனான்."

"டக்ளசோடு நீங்கள் கதைச்சனீங்களா?"

"ஓம், இலண்டனில் இருக்கிற அங்கை மூலமாக தொடர்பெடுத்துக் கதைச்சனான். ஒரு காலத்திலை டக்ளஸ், நான், அங்கை எல்லோரும் இந்தியாவில் ஒன்றாகத்தான் இருந்தோம்: ஒரே கோப்பையில் சாப்பிட்டோம்."

இதற்கு மேலும் கே.பியின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தால் கைகலப்பில் தான் முடியும் என்பது கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவருக்குப் புரிந்திருந்தது. எனவே கே.பியிடம் அவர் கேட்டார்: "கன தூரம் பயணம் செய்ததால் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்தால் நல்லம். பக்கத்தில் ஏதாவது ஹொட்டேல் இருக்கா?" ஏதாவது விடுதிக்குச் சென்று விட்டால் அங்கிருந்து எப்படியாவது விமான நிலையம் சென்று அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிச் செல்லலாம் என்பதே அவரது நப்பாசை.

அப்பொழுது இன்பம் கூறினார்: "நீங்கள் தங்குவதற்கு என்று ஹாட்டேல் எதையும் நாங்கள் ஒழுங்கு பண்ணவில்லை. இப்போதைக்கு நீங்கள் இங்கேயே தங்கலாம். நாளைக்கு எங்களின் முக்கிய உறுப்பினர்மார் சில பேர் இஞ்சை வருவீனம். அவையளையும் நீங்கள் சந்திச்சுக் கதைக்கலாம்."

இவ்வாறு இன்பம் கூறியது கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. அத்தருணத்தில் கே.பி மீண்டும் பேசினார்:

"சுகி என்று எங்கடை முக்கிய போராளி ஒருவர் இஞ்சை இருக்கிறார். அவர் எங்கடை அமைப்பின்ரை முதலாவது ஜட்ஜ் (நீதிபதி). மேற்படிப்புக்காக அவரை மலேசியாவுக்குத் தலைவர் அனுப்பி வைச்சவர். இன்னொரு பிரமுகரையும் ஊரில் இருந்து இஞ்சை கொண்டு வந்திருக்கிறம். ஆளை எங்கடை பொடியங்கள் வெளியிலை கூட்டிக் கொண்டு போயிருக்கிறாங்கள். நாளைக்கு பெரும்பாலும் சுகியோடு அவரையும் நீங்கள் சந்திக்கலாம். ஆள் கிழக்கில் இருந்து வந்திருக்கிறார்."

> "ஆர் தயாமோகனா?" இப்படிக் கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவர் கேட்டதும், முகத்தில் அசடு வழிய இன்பம் கூறினார்: "சரியாகக் கண்டுபிடிச்சிட்டியள்."

"ஆர் தயாமோகனா?" இப்படிக் கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவர் கேட்டதும், முகத்தில் அசடு வழிய இன்பம் கூறினார்: "சரியாகக் கண்டுபிடிச்சிட்டியள். தயாமோகன் இப்ப இஞ்சை தான் நிற்கிறார். ஆளை நாங்கள் பத்திரமாக மட்டக்களப்பில் இருந்து கொண்டு வந்து விட்டோம்."

★★★★ ★★★★

மேற்கு இலண்டனில் அக்ரென் எனும் நகருக்குச் செல்லும் பாதையில் அமைந்திருக்கும் மூன்று அறை வீடு அது. அவ்வீட்டின் பின்புறத்து அறையில் மடிக் கணினியொன்றின் விசைப்பலகைகளைத் தட்டியவாறே தன்னிடம் வந்திருந்தவரிடம் அங்கிருந்தவர் பேச்சுக் கொடுக்கிறார்:

"உங்களிடம் ஏதாவது நல்ல பிசினஸ் ஐடியாக்கள் ஏதாவது இருக்கா?"

"எப்படியான ஐடியாக்கள்?"

"வண் மில்லியன் (பத்து இலட்சம்) பவுண்சுக்கு எடுக்கக் கூடிய பெற்றோல் ஸ்ரேசன் (எரிபொருள் நிரப்பும் நிலையம்) பிசினஸ் ஏதாவது உங்களுக்குத் தெரியுமா?" இப்படி சர்வசாதாரணமாக மடிக் கணினியின் விசைப்பலகையை வருடியவாறே அங்கிருந்தவர் கேட்டது வந்திருந்தவருக்குத் தூக்கிவாரிப் போடும் வகையில் அமைந்திருந்தது. தனது புருவங்களை உயர்த்தியவாறே அவர் கேட்டார்: "ஒரு மில்லியன் பவுண்சா, ஒரு இலட்சம் பவுண்சா?"

"ஒரு மில்லியன் பவுண்சுக்குத் தான் நான் கேட்கிறேன்." எந்தச் சலனமும் இன்றி வந்த பதில் வந்திருந்தவரை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியது.

"மாறன் அண்ணை, ஒரு பெற்றோல் ஸ்ரேசன் எடுக்கிறதுக்கு ஒரு இலட்சம் பவுண்சு போதும்.

தொடர்ச்சி 12ம் பக்கம்

### ஊழலில் சிக்கிய உயரதிகாரி!

சிறீலங்கா கால் பந்தாட்ட சம்மேளனத்தில் இடம்பெற்ற 20 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பில், சம்மேளனத்தின் முன்னாள் நிதி முகாமையாளர் பிரபாத் குணவர்தன விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த விசாரணையின் பின்னர் அவர் கைது செய்யப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஊழல் மோசடியில் குறித்த நிதி முகாமையாளர் சம்பந்தப்படுவதன் பின்னணியில் கால் பந்தாட்ட சம்மேளனத்தில் அதிகாரத்தை கைப்பற்றுவது தொடர்பிலான பழைய ஒப்பந்தம் ஒன்றுடன் தொடர்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் இந்த விசாரணைகளின்போது ஊழலில் ஈடுபட்ட மேலும் பல உயர் அதிகாரிகளின் பெயர்கள் வெளியாகலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### துப்புரவாக்கப்பட்ட காணியில் நிலக்கீழ் அறை!

பளை, அரசர்கேணியில் நிலக்கீழ் பதுங்கு குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்தபோதே நிலக்கீழ் பதுங்குகுழி தென்பட்டது. இந்தப் பதுங்கு குழி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் பயன்படுத்தப்பட்டது என்று நம்பப்படுகின்றது. பதுங்கு குழி இருப்பது தொடர்பில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். பதுங்கு குழியை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த இராணுவத்தினர், அதுவரை காணியில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் என்று காணியின் உரிமையாளருக்கு அறிவுறுத்தியுள்ளனர். அங்கு சென்ற பச்சிலைப்பள்ளி பிரதேச சபை



உறுப்பினர் க.துர்சோதனன் பதுங்கு குழியை முழுமையாக அழிக்க வேண்டாம் என்று இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன் அடிப்பாகம் பெட்டி வடிவில் இருப்பதால் அதைத் துப்புரவு செய்து தரும் பட்சத்தில் தேங்காய் மட்டை



களை ஊறவைத்துத் தும்பு உற்பத்தி செய்யப் பயன்படுத்த முடியும் என்று அவர் கோரியுள்ளார். அவரின் கோரிக்கைக்கு இராணுவத்தினர் சாதகமாகப் பதிலளித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# முள்ளிவாய்க்கால் முடிவு ... செயற்பாடுகளை முன்னெ...

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று 9 வருடங்களை அண்மிக்கும் இந்தவேளையில், 18ம் திகதி நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் பேரழிவின் நினைவு நாள் நிகழ்வுகள், பேரணி மற்றும் ஒழுங்கமைப்புகள் குறித்து பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாகப் பொறுப்பாளர் திரு.பாலசுந்தரம் அவர்கள் ஈழமுரசுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் இது.**

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம்பெற்று 9 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் புலம்பெயர் போராட்டங்களின் பலாபலன் எந்த நிலையில் உள்ளது?**

முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்குப் பின்னர் தமிழ் மக்களிடையே இருந்த மனச்சோர்வு, தோல்விமனப்பான்மை போன்றவற்றையெல்லாம் நிவர்த்திசெய்ய வேண்டிய இடத்தில் நாம் இருந்தோம். எங்களின் செயற்பாடுகளில் கூட ஒரு தேக்கநிலை காணப்பட்டது. நாங்கள் எதிர்பார்த்த ஒரு நாடு அங்கு அமைந்து, அந்த நாட்டுக்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு, ஒரு நாடாக அங்கீகரிக்கப்படும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால், அனைத்து உலக நாடுகளும் தமது பொருளாதார நலன் கருதி அங்கு செய்த அந்த அழிப்பானது எங்களுக்கு ஒரு மீள முடியாத மன அழுத்தத்தைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. இதேநிலைமை பொதுமக்களிடத்திலும் காணப்பட்டது. அவர்களை மீளவும் அந்தத் தோல்வி மனப்பான்மையில் இருந்து மீட்டு, எங்களுடைய விடுதலையை நோக்கி அவர்களை வழிநடத்தவேண்டிய ஒரு பாரிய பொறுப்பு எமக்கும், எம்மைச் சார்ந்த கட்டமைப்புக்களுக்கும் இருந்தது. பல முயற்சிகளுக்கூடாக நினைவு நாட்களை நினைவுகொள்வது அந்த நிகழ்வுகளை மீளவும் நினைவிற்கு கொண்டுவரும் விடயங்களில் கரிசனையோடு காலங்களைச் செலுத்தி அந்த நிலைக்குக்கொண்டுவந்தோம். ஆனால், முள்ளிவாய்க்காலின் முடிவானது எமக்கு புலம்பெயர் மண்ணில் அரசியல் செயற்பாடுகளை நடாத்துவதற்குத் தரப்பட்ட ஆயுதமாகவே நாங்கள் பாவிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் தோல்வியில் இருந்து எங்களை வெற்றியின் பாதைக்கு எடுத்துச் செல்லவேண்டிய ஓர் இடத்தில் தான் நாங்கள் இருந்தோம். அந்தவகையில் இது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் மெல்ல மெல்ல சிறீலங்கா அரசாங்கத்துக்கான அழுத்தங்களைக் கொடுக்கக் கூடிய வகையில், அதற்கான வேலைகளை அந்த இடங்களில் செய்து அந்த முள்ளிவாய்க்கால் இழப்புக்கான பொறுப்புக்கூறல் என்ற விடயத்தையும் அதன் குற்றவாளிகளை குற்றக்கூண்டில் நிறுத்துவதற்கான வேலைத்திட்டங்களையும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றோம். அது மெல்ல மெல்லத்தான் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

ஆனால், ஆயுதப் போராட்டத்தின் போது வேகமாக நடந்ததுபோல, நடக்கவில்லை என்பது பலருக்கும் இருக்கக் கூடிய மனத்தாங்கல். ஆனால் அது அப்படி நடக்கக்கூடிய சாத்தியங்கள் இல்லை. இது சனநாயகப் போராட்டம் என்ற வகையில் அது அவ்வாறுதான் நகரும். அந்த வகையில் மக்களை இன்றும் அந்த நினைவுக்குள் வைத்து, நினைவிற்கான பொறுப்புக்கூறலையும் அதற்கான தண்டனையை வாங்கிக் கொடுப்பதிலும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பாரிய பணியைச் செய்திருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு உங்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் பற்றி...?**

மே 18 தொடர்பாக ஏற்கெனவே திட்டமிடப்பட்டு சில பணிகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதேநேரம் மே 1 அன்றும் எங்களுடைய மக்கள் பங்கேற்று, தற்சமயம் இருக்கக்கூடிய எமது நிலைப்பாட்டை வெளிநாட்டுமக்களுக்கு சொல்லுகின்ற ஒரு தினமாகத்தான் அது ஒழுங்கமைக்கப்படுகின்றது. அதேபோல், மே 18 எங்களுக்குரிய தினமாக இருந்து வருகின்றது. அதனைமுன்னிட்டு மே 16, மே 17 ஆம் திகதிகளில் பிரான்சு பாராளுமன்றத்தின் முன்பாக மே 18 அவலங்களைக் காட்சிப்படுத்தி காலை 10.00 மணிமுதல் மாலை 17.00 மணிவரை துண்டுப் பிரசுரங்களை வழங்கி பிரச்சாரப் போராட்டங்களை நடாத்த இருக்கின்றோம்.

மே 18 ஆம்திகதி பிற்பகல் 14.00 மணிக்கு பரிஸ் லாச்சப்பல் பகுதியில் இருந்து ஆரம்பிக்கும் பேரணி றிபப்ளிக் சதுக்கத்தை அடைந்து அங்கு விசேடமாக உருவாக்கப்பட்ட அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அதில் எங்களுடன் இணைந்து பணிபுரியும் வெளிநாட்டவர்களும் எங்களுடன் இணைந்து எமக்கான ஆதரவினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் எம்மால் செய்யப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் முள்ளிவாய்க்காலில் மே 18, 2009 அன்று இடம்பெற்று ஒரு வருடத்தின் பின்னர் மே 18, 2010 அன்று செவ்ரோனில் முள்ளிவாய்க்காலில் பலியான மக்களுக்கான நினைவுக்கல் மற்றும் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் மாவீரர்களுக்காகவும் செவ்ரோனில், இரண்டு மரங்கள் அந்த நகரசபையினால் நடப்பட்டன. அந்த இடத்தில் வழமை போன்று காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. அதைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு கிளிச்சிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு முன்னால் நினைவு வணக்க நிகழ்வுகள் நடாத்தப்பட்டு தொடர்ந்து 14.00 மணிக்கு லாச்சப்பலில் இருந்துபேரணி தொடங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் அந்தந்த இடங்களில் இருக்கும் வெளிநாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தும் அதேவேளை, எமது மக்கள் இந்த நினைவுகளை மறந்து விடாமல் அதற்கான போராட்டங்களிலும் அதற்குரிய தீர்வுகளைக் காணும் முகமாகவும் அவர்களை எழுச்சிப் படுத்தவதற்காகவும் இவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

**தற்போதைய காலத்தில் புலம்பெயர் மக்களின் எழுச்சியில் சற்று வீழ்ச்சி காணப்படுகின்றதே அதுபற்றி...?**

தொடர்ந்து செய்யப்படுகின்ற எழுச்சி நிகழ்வுகளின் பிரச்சாரங்களினூடாகத்தான் மக்களை எழுச்சிகொள்ள வைக்க முடியும். இது யதார்த்தமான நிலை. இதற்கு இங்கே ஓர் அரசியல் அல்லது விடுதலை பற்றிய ஏதாவது நிகழ்வு ஒன்று வெளிப்படையாக வரும்போது, மக்கள் அந்தப்போராட்டங்களில் வெளிப்படையாகப் பங்குகொள்ளும் சாத்தியங்கள் உண்டு. இதனை நாங்கள்தான் ஏற்படுத்த வேண்டும்.

**தாயகத்தில் இன்று நடைபெற்று வருகின்ற மக்களின் எழுச்சிப் போராட்டங்களை எப்படி நோக்குகின்றீர்கள்...?**

தாயகத்திலும் பொருளாதார வசதிகளை தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் ஏற்படுத்தல், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றைத்தான் சிறீலங்கா அரசாங்கம் சில சில இடங்களில் செய்துவைத்திருக்கின்றது. இந்தச் செய்கையானது கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இப்படியான வசதிகளைக் காணாதவர்களுக்கு இது ஒரு தீர்வுமாதிரி. அதாவது போராட்டத்துக்குள் 30 வருடங்களாக இருந்த அந்த மக்களுக்கு இது ஒரு பெரிய தீர்வாகக் காணப்பட்டது. ஆனால், இதே காலப்போக்கில் கடந்த 9 வருடங்களில் அவர்கள் அதனூடாகப் பெற்ற வசதிகளை விட உரிமை ரீதியாகவும் அவர்கள் தமிழர் என்ற ரீதியாகவும் ஒடுக்கப்பட்டமை மீண்டும் அவர்களை போராட்டத்துக்குள் கொண்டுவந்திருக்கின்றது என்பதே உண்மை.

அந்தவகையிலே அதிலே நேரடியாகப் பாதிக்கப்பட்ட காணி இழந்தவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள் இவர்கள் எல்லாம் இழப்புக்களைச் சந்தித்தவர்கள். இவர்கள் இந்த அரசாங்கத்திடம் இருந்து தீர்வு வரும் என்று கொண்டுவரப்பட்ட தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்கள். இன்று ஏமாற்றமடைந்து மீண்டும் அந்தப் போராட்டத்தைக் கையில் எடுக்கும் நிலைமையையே அங்கு பார்க்கின்றோம். தமிழர்களின் அரசியல் தலைமைகள் தங்கள் வசதிகளுக்காக அரசாங்கத்திடம் விலைபோய், மீண்டும் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் நிற்பதையே நாங்கள் இன்று காண்கின்றோம். எனவே இது, மக்களுடைய போராட்டம். மக்கள் தங்கள் கைகளில் எடுத்து நடத்துகின்றார்கள். அது நிச்சயமாக ஒரு காலகட்டத்தில் எழுச்சி பெறும் என்பதுதான் உண்மை.

**போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் எப்படியான உதவிகள் செய்யப்படுகின்றன...?**

அங்கு இருக்கக் கூடிய பொருளாதார பிரச்சினை என்பது, தனியவே தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினாலோ,, புலம்பெயர் மக்களாலோ தீர்க்கப்படக் கூடிய விடயமல்ல. ஆனால் அந்த இடத்திலும் அங்கு இருக்கக்கூடிய உறவுகள், இந்தப்போராட்டத்தில் பங்குபற்றி சுய நடவடிக்கைகளுக்கு முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். கைகால்களை இழந்து, கண்களை இழந்து நடக்கமுடியாமல் நிறையபேர் இருக்கிறார்கள். அவ்வாறானவர்களை இனங்கண்டு பரவலாகச் செய்யப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. அந்த வகையில் ஒவ்வொரு சங்கங்கள் சிலசில பொறுப்புக்களை எடுத்துச் செய்வதற்கு ஊக்குவித்திருக்கின்றோம். அதேபோல் இங்குள்ள கட்டமைப்புக்கள் தங்களுடைய சேமிப்புகளில் இருந்து உதவி செய்வதற்குத் தூண்டி இருக்கின்றோம். இது காணாது என்பது தெரியும். ஆனால், இந்த முயற்சி பரவலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் தெரிந்தவர்களுக்கு அவரவர்கள் உதவிகளைச் செய்தார்கள். அதனால், ஒரே நபர் பலரிடம் உதவிகளைப் பெற்ற சூழ்நிலையும் ஏற்பட்டது. அவ்வாறான தவறுகளும் இடம்பெற்றது. அதேநேரம், இவற்றை எல்லாம் ஒருங்கிணைத்து உதவிகளைச் செய்வதற்கு அண்மைக்காலத்தில் ஒழுங்குசெய்யப்பட்டது. அந்த ஒழுங்கில், பிரான்சுக்குத் தரப்படுகின்ற செயற்பாடுகளை பிரான்

# புலம்பெயர் மண்ணில் நாம்
# டுக்கத் தரப்பட்ட ஆயுதம்!

சந்திப்பு
கந்தரதன்

சில் இருந்து நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். அதேநேரம் எங்களுக்கு நேரடியாகத் தெரிகின்ற ஆதாரபூர்வமான, உண்மையான விடயங்களுக்கு நாங்கள் கைகொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. குறித்த உதவி செய்யப்பட்டதும், குறித்த இடத்திற்கு அந்த உதவி செய்யப்பட்டதை நாங்கள் மையப்படுத்துகின்றோம். ஏனென்றால், இன்னொரு நாட்டில் இருந்து செய்யப்படும் உதவி ஒரே நபருக்கு செல்லாமல் வேறு ஒருவருக்குக் கிடைக்க வாய்ப்பாக இருக்கும். இது நடைமுறைக்கு சிக்கலாக இருந்தாலும் இந்த நடைமுறையை நாங்கள் கடைப்பிடிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதைத்தான் இப்பொழுது செய்துகொண்டுவருகின்றோம். இங்குவருகின்ற உதவிகளை நாங்கள் கொடுக்கக்கூடிய நிலையில் அதனை பதிவுசெய்தும் வைத்துள்ளோம். இவ்வாறான செயற்பாடுகளை முன்னகர்த்திக்கொண்டுதான் இருக்கின்றோம். இதில் விடுபடுபவர்களின் குற்றச்சாட்டுக்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாகவே இருக்கின்றோம். இதேநேரம் அங்குள்ள அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் எந்தக் கரிசனையும் அற்றவர்களாக இருப்பது ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. அண்மையில் வடமாகாண முதலமைச்சர் இதற்கான ஒரு நிதியத்தை ஏற்படுத்துவதற்கான விடயத்தை முன்வைத்து அதற்கான அனுமதியையும் கேட்டிருந்தார். அந்த அனுமதி இன்றுவரை கொடுக்கப்படவில்லை. அப்படி ஒரு மையப்படுத்தப்பட்ட இடத்திற்கு காசுகளை அனுப்பி அதற்கான வேலைகளைச் செய்வதற்கு அந்த அரசாங்கத்தினால் போடப்படுகின்ற முட்டுக்கட்டைதான் இதற்குக்காரணம். இதற்கு தமிழ் அரசியல்வாதிகளும் இதனைக் கண்டும் காணாததுபோல் இருப்பது அடுத்த பிரச்சினை. ஆனால், சாதாரண மக்கள், சாதாரண புலம்பெயர்வாழ் அமைப்புக்கள் இதற்கு உதவிசெய்வதை நாங்கள் பார்க்கின்றோம்.




**புலம்பெயர் தேசத்திலும் சரி, தாயகத்திலும் சரி நாம் பாதிக்கப்பட்ட இனம் என்பதை மறந்து கொண்டாட்டங்களை பெரும்செலவில் களியாட்டங்களாக செய்கின்றார்களே...?**

கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் என்பது எல்லாம் மனித உணர்வோடு சம்பந்தப்பட்ட விடயம். வாழ்க்கையில் சந்தோசம் துக்கம் எல்லாம் வந்து வந்து போகும். ஆனால், அந்த சந்தோச நிகழ்வுகளை நடாத்துவதை நாங்கள் மறுதலிக்க முடியாது. அது உறவினர்கள், நண்பர்கள்? ஒன்று கூடுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு விடயம். இன்னொரு பக்கம் அதற்காக செலவழிக்கப்படும் தேவையற்ற செலுவுகளை அனுமதிக்கமுடியாது. அது உச்சத்திற்கு போவது கண்டிக்கப்படவேண்டிய விடயம். அதிலே மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. எப்படியானவர்கள் இவ்வாறான களியாட்டங்களைச் செய்கின்றார்கள் என்றால், அங்கு தேவைகளை வெளிநாட்டில் வாழும் உறவுகளுக்குத் தெரியப்படுத்தி, அதிகமான பணத்தை எடுத்து அந்தப் பணத்தினூடாகத்தான் அந்தக் களியாட்டங்கள் நடைபெறுகின்றது. அந்தக் களியாட்டத்தைப் பார்க்கும்போது, புலம்பெயர் மண்ணில் இருந்து பணத்தை அனுப்பியவர்கள்கூட சந்தோசப்படுவதாக இல்லை. இப்படி பணத்தை விரயம் செய்கின்றார்களே என்பதைத்தான் நாங்கள் பார்க்கின்றோம். தாயகத்தில் இருப்பவர்களுக்கு வெளிநாட்டில் இருந்து வரும் பணம், எவ்வாறு வருகிறது என்பதைப் பார்ப்பதில்லை. இவ்வாறானவர்கள் எல்லா விடயத்திற்கும் வெளிநாடுகளில் தான் தங்கியிருக்கின்றார்கள். அந்த நிலைமையை ஒரு விழிப்புணர்வுக்கூடாகத்தான் மாற்றலாமே தவிர, அந்த உணர்வுகளில் இருந்து அவர்களை மீட்டு எடுக்க முடியாது. அவ்வாறான விழிப்புணர்வுப்போராட்டம் தாயகத்தில் இடம்பெறவேண்டும். இவ்வாறான பணத்தை ஏழைகளுக்கு உதவிசெய்வதற்கு பயன்படுத்தலாம் என்பதை வலியுறுத்தவேண்டும். இவ்வாறானவர்கள், ஏழைகளுக்கோ, தொண்டு அமைப்புக்ளுக்கோ, கல்விகற்க வசதியில்லாதவர்களுக்கோ, பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கோ உதவ முன்வருவதில்லை.

வெளிநாடுகளில் பிறந்த நாள் நிகழ்வின்போது, தாயகத்தில் உள்ள தொண்டு அமைப்புக்களுக்கு காசுகளை அனுப்பி, அங்குள்ள பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்குரிய ஒழுங்குகளை செய்வதைக் காணமுடிகின்றது. இங்குள்ளவர்களின் மனநிலைக்கும் அங்குள்ளவர்களின் மனநிலைக்கும் பாரிய வித்தியாசங்கள் உள்ளன. இதற்கு விழிப்புணர்வுப்பிரசாரங்கள் நிச்சயம் தேவை.

**லாச்சப்பலில் பேரணி புறப்படும் மூன்று மணிநேரம் வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைக்கும் அதேவேளை, லாச்சப்பல் எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு துக்கநாளாகவே காணப்படும்.**

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகொள்ளவுள்ள இந்த நேரத்தில் மக்கள் இதனை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறவிரும்புகின்றீர்கள்...?**

பரவலாக உள்ள சங்கங்களின் பொதுக் கூட்டங்களில் இதற்கான பிரச்சாரங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. நடைபெறும் விளையாட்டுப்போட்டிகள் நிகழ்வுகளில்கூட இதற்கான பிரச்சார வேலைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. தொடர்ச்சியாக மக்கள் கூடும் இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. மே 18 , நவம்பர் 27 இரண்டு தினங்களும் தமிழர்களுக்கு முக்கியமான நாட்களாகத்தான் பார்க்கப்படுகின்றது. விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவுகொள்ளும் நாள் என்பது போல மே 18 என்பது படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும் இன அழிப்பின் குறியீடாகவும் பார்க்கப்படுகின்றது. அந்தக் குறியீட்டு நாளில் பெரியளவில் போராட்டங்களை நடாத்தி பிறநாட்டு மக்களை எங்கள் பக்கம் பார்க்கவைத்து, எங்களுக்கு நடந்த கொடுமைகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தும் முகமாக நடைபெறும் போராட்டங்களில் அனைவரும் கலந்துகொண்டு அதை வலுப்படுத்த வேண்டும். வலுப்படுத்தி அந்த நாடுகளின் அனுதாபத்தைப் பெறுவதன் ஊடாகத்தான் நாங்கள் அடுத்தகட்ட நகர்வை ஐக்கிய நாடுகள் சபையில் எடுக்க முடியும். நாடுகளின் ஆதரவு இல்லாமல் அங்கே எந்த விடயத்தையும் நகர்த்தமுடியாது. எனவே நாங்கள் நாங்கள் வாழும் நாடுகளின் ஆதரவைப் பெறவேண்டும் என்றால், அந்தந்த நாடுகளில் நடக்கின்ற போராட்டங்களின் ஊடாக அல்லது சந்திப்புகளின் ஊடாக அவர்களுக்கூடாக கொடுக்கப்படவேண்டிய செய்திகளைக் கொடுக்கவேண்டும். தற்சமயம் நடக்கும் விடயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். அந்தத் தெரியப்படுத்தல் ஒரு காலகட்டத்தில் எங்களுக்கான ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபையில் திரும்புவதற்கு நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வழிவகுக்கவேண்டும். அதனுடைய பிரதிபலனை ஒருகாலகட்டத்தில் காணலாம். இது எல்லோருடைய கடமை.

இந்த நாளில் எமது உறவுகளின் இழப்புக்கு மரியாதைசெய்வதோடு, அவர்களின் இழப்புக்களுக்கு இழப்பீடுகாண்பதாக சிந்தித்துக்கொண்டு நாட்டை மீட்கவேண்டும் என்ற நினைவோடு கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவேண்டும். இதேவேளை, மே 18 இடம்பெறும் வாரத்தை மக்கள் நினைவு வாரமாகக் கடைப்பிடிக்கவேண்டும். லாச்சப்பலில் பேரணி புறப்படும் மூன்று மணிநேரம் வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைக்கும் அதேவேளை, லாச்சப்பல் எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு துக்கநாளாகவே காணப்படும். வர்த்தக நிலையங்களின் முன்பாக கதவடைப்புச் செய்யப்படுவதற்கான காரணம் அடங்கிய பிரசுரம் பிரெஞ்சு மொழியில் ஒட்டப்படுவதற்கான ஏற்பாடுகளும் எம்மால் செய்யப்பட்டுள்ளன. இதற்கான பூரண ஒத்துழைப்பை பொதுமக்களிடம் இருந்து எதிர்பார்த்து நிற்கின்றோம்.




# ஆனையிறவை வெற்றிக் கொண்ட வரலாற்றுத் திருநாளின்று

22.04.2018



என் தமிழ் இனமே
நீயும் நானும்
வெற்றிகளை கொண்டாட முடியாத
வீணர்களாய் போனோம் என்று
வேதனைப் பட்டதுண்டா
பிறந்த நாள் கொண்டாட்டம்
பூப்புனிதநாள் கொண்டாட்டம்
திருமணநாள் கொண்டாட்டம்
தாத்தாவுக்கு கொண்டாட்டம்
பேரனுக்கும் கொண்டாட்டம்
இதுவா கொண்டாட்டம்
போத்துக்கேயர் டச்சுக்காரர்
ஆங்கிலேயர் சிங்களவர்களென
ஆண்டுகள் நீட்சியாய்
ஆட்சி புரிந்த ஆனையிறவு
தன் மாட்சி மிக்க
தமிழரின் எழுச்சிப் படைகள்
தகர்த்து அதை மீட்சி புரிந்த
எழுச்சி நாளின்று
உலகமே புலிகளின்
போர் திறன் காட்சி பார்த்து வியந்தது!
இவன் இராணுவ மேதை என்று
தலைவன் பெயரை
வரலாறு சாட்சி எழுதியது
இலட்சக்கணக்கான
சிங்கள முப்படைகளோடு
ஆயிரக்கணக்கான
தமிழர் புலிப்படைகள் போரிட்டு
ஆனையிறவை வெற்றி கொண்ட
வரலாற்றுத் திருநாளின்று
நம் புலிகள் இன்றிருந்தால்
நாட்டில் வெற்றி முரசு கொட்டும்
புலிக்கொடி வானில் பறக்கும்
புலிப்படை வரிசை கட்டும்.

முகநூல் - காந்தன் கவிதைகள்

அரியலூர் மாவட்டம் திருமானூர் அருகே உள்ள சூமுடிகொண்டான் கிராமத்தில் மரத் தொழிலகம் வைத்து நடத்தி வரும் பாஸ்கர், திருநாவுக்கரசு, ராஜா மூன்று சகோதரர்களால் தயாரிக்கப்படும் சக்கரம், செயின், பிரேக் தவிர்த்து மீதி அனைத்தும் தேக்கு மரத்தால் செய்யப்பட்ட சைக்கிள்கள்
விலை ரூ.10 ஆயிரம்.

முகநூல்- ராக்கி ராக்கி தமிழ் நண்பர்கள் குழு






# டக்ளசுடன் ஒரே தட்...

அதுவும் அவுட் ஒப் இலண்டனில் (வெளிமாவட்டங்கள்) இன்னும் குறைஞ்ச காசில் பெற்றோல் ஸ்ரேசன்களை எடுக்கலாம்."

இப்பொழுது மடிக் கணினியில் இருந்து தனது விரல்களை எடுத்து விட்டு மாறன் என்பவர் கூறினார்: "நான் ஒரு மில்லியன் பவுண்சுக்கு பெற்றோல் ஸ்ரேசன் எடுக்கிறது பற்றிக் கதைக்கிறன். முழுக் கட்டிடத்தையும், காணியையும் நாங்கள் விலைக்கு வாங்கிற மாதிரித் தான் ஐடியா."

"ஒரு மில்லியன் பவுண்சா? அவ்வளவு காசுக்கு எங்கே போகப் போகிறீங்கள்?" இவ்வாறு மாறன் என்பவரின் எதிரில் அமர்ந்திருந்தவர் கேட்ட பொழுது, அவரை ஒரு ஏளனப் பார்வையுடன் சில வினாடிகள் மாறன் என்பவர் பார்த்தார். அந்தப் பார்வையில் பண முதலீடுகள் பற்றித் தெரியாத ஒருவரிடம் உரையாடிய தோரணையே அவரிடம் தென்பட்டது.

★★★★ ★★★★

"அண்ணைக்கான இரவுச் சாப்பாட்டை ஒழுங்குபடுத்திப் போட்டு அவரின் அறையைக் காட்டுங்கோ. ஆள் ரெஸ்ட் எடுக்கட்டும். மிச்ச விசயங்களை நாளைக்கு சுகி வந்த பிறகு கதைப்பம்." இவ்வாறு இன்பத்திடம் கட்டளை பிறப்பித்து விட்டு, தனது வீட்டின் உட்புறத்திற்குள் கே.பி நுழைந்தார்.

"உங்களுக்கேன் சிரமம். நான் ஏதாவது ஹொட்டேலில் போய் தங்குகிறேன். ரக்சி (வாடகை மகிழுந்து) ஏதாவது ஏற்பாடு செய்து தந்தீர்கள் என்றால் நான் ஏதாவது ஹொட்டேல் பார்த்துப் போகிறேன்."

இவ்வாறு அங்கிருந்து தப்பும் இறுதி முயற்சியாக கே.பியின் பிடியில் சிக்கியிருந்தவர் கேட்ட பொழுது, ஒரு ஏளனச் சிரிப்புடன் இன்பம் கூறினார்: "இஞ்சை எல்லா வசதிகளும் இருக்கும். நாங்கள் ஹொட்டேல் ஒன்றை புக் (பதிவு செய்து) பண்ணி வைச்சிருக்கிறம். ஆனால் அது அடுத்த கிழமை வாற ஆட்களுக்காகத் தான். அங்கை தான் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைக்கிறது பற்றின சந்திப்புக்களை நடத்துவதாக இருக்கிறம். இப்போதைக்கு நீங்கள் இங்கேயே தங்கியிருக்கலாம்."

**ஒரு மில்லியன் பவுண்ஸ் பணம், அந்தக் கனடாக்காரனிடம் இருந்து திரும்பவும் இலண்டனுக்கு வந்திருக்கு. ஆனால் உண்டியலில் கனடாவிற்கு அனுப்பி வைத்த ஆட்களுக்கு அந்தப் பணம் திரும்பி வரவில்லை.**

★★★★ ★★★★

இலண்டனில் உள்ள பணப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றின் பணியாளர் ஒருவரிடம் இருந்து வெளிப்பட்ட அந்தத் தகவல், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் மத்தியில் காட்டுத் தீ போல் பரவிக் கொண்டிருந்தது...

"சண்டை முடியிறதுக்கு சில நாட்களுக்கு முன்னர் கனடாவில் உள்ள ஒருத்தருக்கு இலண்டனில் இருந்து உண்டியல் மூலம் இஞ்சையிருக்கிற ஆட்கள் அனுப்பின ஒரு மில்லியன் பவுண்ஸ் பணம், அந்தக் கனடாக்காரனிடம் இருந்து திரும்பவும் இலண்டனுக்கு வந்திருக்கு. ஆனால் உண்டியலில் கனடாவிற்கு அனுப்பி வைத்த ஆட்களுக்கு அந்தப் பணம் திரும்பி வரவில்லை. மணி என்கிற ஒருவருக்குத்தான் அது வந்திருக்கு.

"யார் அந்த மணி?" "அப்ப மணி ஒரு மில்லியனெயர்...?"

"மணியிடம் நிறைய மணி இருக்கு."

இவ்வாறு ஒவ்வொருவரும் பேசிக் கொண்டாலும், எல்லோருடைய கவனமும் மணி என்ற பெயருக்குரியவர் யார் என்பதை இனம் காண்பதிலேயே இருந்தது. மணி என்ற பெயருக்குரிய அந்த நபரை தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும் தேடினார்கள், யுத்தத்தின் இறுதி நாட்களில் பெரும் தொகைக் கடனுதவி வழங்கிய தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் தேடினார்கள், கிரிதலவில் போலித் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாசறையை நிறுவிய தவேந்திரனின் ஆட்களும் தேடினார்கள், தனது துணைவியாரையும், குடும்பத்தினரையும் சிங்களப் புலனாய்வுத்துறையினர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்ததால், கே.பியின் தலைமையை ஏற்றுக் கொண்ட விநாயகம் அவர்களின் கையாட்களும் தேடினார்கள்.

ஆனால், கோலாலம்பூரில் தங்கியிருந்த கே.பியும், நோர்வேயில் இருந்தவாறு கே.பியின் சார்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அவரது வலது கரமான சர்வே என்றழைக்கப்படும் தர்மலிங்கம் சர்வேந்திராவும் மட்டும் இலண்டனில் தங்கியிருந்த மாறன் என்பவரைத் தேடும் படலத்தில் இறங்கியிருந்தார்கள்.

(மடையுடைப்புத் தொடரும்)



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வை வழங்கக்கூடிய ஒரே தலைவர் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** தமிழர்கள் எல்லோரையும் கொன்று நிரந்தரத் தீர்வை வழங்கியிருப்பாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலிலும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கி அவரின் வெற்றிக்காக சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரும் உழைக்கவுள்ளதாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அவர்தான் இரண்டாம் முறை போட்டியிட மாட்டேன் என்று கூறிவிட்டார், பிறகெப்படி..?

★★★★ ★★★★

**செய்தி:-** நித்தியானந்தாவின் சொத்து மதிப்பு 1.5 பில்லியன் டொலர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.?

**எழும் கேள்வி:-** வேலைக்குப் போனாலே உழைக்கமுடியாத இந்தப் பணத்தை, வேலையே செய்யாமல் எப்படிச் சம்பாதித்தாராம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** மக்கள் பாவனைக்காக அண்மையில் விடுவிக்கப்பட்ட - வலிகாமம் வடக்கின் சில இடங்களை சிறீலங்கா இராணுவத்தினர் மீளவும் அபகரிப்பு செய்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**எழும் கேள்வி:-** இதுதான் விட்டுப் பிடிக்கிறதோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** நல்லாட்சி அரசு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவை திரட்டும் வலிமையை இழந்து போய்விட்டது. அதனால் இந்த அரசின் கீழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது உட்பட்ட விடயங்கள் அடங்கிய புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது என்பது சாத்தியமற்றுப் போய்விட்டது. இந்த யதார்த்த நிலைமையை புரிந்து கொண்டு இந்த அரசின் எஞ்சிய காலத்தில் வேறு பயனுள்ள விடயங்களை நாம் எட்ட முயற்சிக்க வேண்டும் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளரும் சிரேஸ்ட சட்டத்தரணியுமான என். சிறீகாந்தா தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** ஏதாவது எலும்புத் துண்டொன்று கிடைத்தால் உங்களுக்குப் போதும்போலும்..?

★★★★ ★★★★

**செய்தி:-** எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது உலக நாடுகளில் நடக்காத செயல். அவ்வாறு கொண்டு வருவது நாகரிகமானது அல்ல என சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** எதிர்க்கட்சி ஆளும் கட்சிக்காகவே செயற்பட்டு வருவதும் உலக நாடுகளில் நடக்காத செயல் என்பது சம்பந்தருக்குத் தெரியாதோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** ஒன்றிணைந்த இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் தமிழ் மக்கள் தமக்குரிய வழியை வகுத்துக்கொள்வார்கள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** தமிழர்கள் ஏற்கனவே தங்களுக்கான வழியை வகுத்துக்கொண்டு விட்டது சம்பந்தனுக்கு தெரியாதோ..?




# உலகில் நூற்றுக்கு 80 வீதமான மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். கடவுள் நம்பிக்கை குறித்த அரிச்சந்திரனின் பார்வை என்ன..?

**கேள்வி:–** காணாமல்போன உறவுகள் இத்தனை காலமாகப் போராடுகின்றனரே, சிங்கள ஆட்சியாளர்களின் காதுகளுக்கு அது எட்டவில்லையா..? அல்லது எட்டாததுபோல் நடிக்கின்றார்களா..?

குணசிங்கம் தயாபரன் பிரான்ஸ்

**பதில்:–** ஒருவர் தன் மனைவிக்கு காது சரியாகக் கேட்பதில்லை என்று மருத்துவரிடம் சென்று உதவி கேட்டாராம். அதற்கு மருத்துவர் எவ்வளவு தூரத்திலிருந்து பேசினால் உங்கள் மனைவிக்கு காது கேட்கவில்லை என்று தெரிந்தால்தான் அதற்கு ஏற்றதுபோல் சிகிச்சை செய்யலாம். முதலில் அதனை அறிந்து வாருங்கள் என்று சொல்லி அனுப்பிவைத்தாராம்.

வீடு திரும்பிய கணவன், மனைவிக்கு பின்னால் 50 அடி தள்ளி நின்று 'இன்று இரவுக்கு என்ன சாப்பாடு...?' என்று கேட்டார். மனைவியிடமிருந்து பதில் வரவில்லை. சற்று நெருங்கி 40 அடி கிட்ட நின்று அதே கேள்வியை திரும்பவும் கேட்டார். அப்படியும் பதில் வராததால் 30 அடி, 20 அடி என நின்று கேட்டுள்ளார். இறுதியாக 10 அடி அருகில் நெருங்கி நின்று அதே கேள்வியை கேட்டபோது, மனைவி திரும்பிக் கடும் கோபத்தோடு சொன்னாராம் 'என்ன சாப்பாடென்று இதோட ஐந்தாவது தடவையா சொல்லிவிட்டேன். உங்களுக்கென்ன காது செவிடா..?' என்று.

இப்படித்தான் இருக்கின்றது உங்கள் கேள்விக்கான பதிலும். காது கேளாதது கணவனுக்கா, மனைவிக்கா..? கேளாததுபோல் நடிப்பது தமிழர்களா, சிங்கள ஆட்சியாளர்களா..?




சிங்கள ஆட்சியாளர்கள் காதுக்கு அந்த மக்களின் அவலக்குரல் எட்டுவது இருக்கட்டும், அந்த மக்களின் போராட்டம் எத்தனை தமிழர்களின் காதுகளை இதுவரை எட்டியிருக்கின்றது..? அப்படி எட்டியிருந்தால் அந்தப் போராட்டம் இன்று சர்வதேசம் வரை வியாபித்திருக்கும், சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், தமிழர்களின் காதுகளை இன்னமும் முழுமையாக அந்த மக்களின் அவலக்குரல் அடையாமையால்தான் அந்த மண்ணுக்குள் மட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் குரல் முடக்கப்பட்டிருக்கின்றது.

**கேள்வி:–** உலகில் நூற்றுக்கு 80 வீதமான மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். கடவுள் நம்பிக்கை குறித்த அரிச்சந்திரனின் பார்வை என்ன..?

நல்லதம்பி சிவநாயகி பிரான்ஸ்

**பதில்:–** எனது பார்வை இருக்கட்டும், 'படிக்காத மேதை' காமராஜரின் பார்வை எப்படி இருக்கின்றது என்று பாருங்கள். ஒருமுறை அவரிடம் ஒருவர் 'நீங்கள் பல தெய்வ வழிபாட்டை வெறுக்கிறீங்களா, இல்லே, தெய்வ வழிபாட்டையே வெறுக்கிறீங்களா?' என்று கேள்வி எழுப்பினாராம். அப்போது அவர் கூறிய பதில் ஏராளமான கேள்விகளை மக்கள் மனதில் எழுப்பிவிட்டது. அவர் எழுப்பிய கேள்விகள் இவைதான்...

"லட்சுமி, சரசுவதி, பார்வதி, முருகன், விநாயகர், பராசக்திங்கிறதெல்லாம் யாரோ ஓவியர்கள் வரைஞ்சிவச்ச சித்திரங்கள். அதையெல்லாம் ஆண்டவன்னு நம்மாளு கும்பிட ஆரம்பிச்சிட்டான். சுடலைமாடன், காத்தவராயன்கிற பேர்ல அந்த வட்டாரத்துல யாராவது பிரபலமான ஆசாமி இருந்திருப்பான். அவன் செத்ததும் கடவுளாக் கிட்டான் நம்மாளு. கடவுள்ங்கிறவரு கண்ணை உருட்டிகிட்டு, நாக்கை நீட்டிகிட்டுதான் இருப்பாரா...?




அரேபியாவிலே இருக்கிறவன் அல்லான்னான், அதுல சன்னி, சியா, சூஃபி, பாகா என்று பல உட்பிரிவுகளையும் உருவாக்கினான். ஜெருசலத்தில இருக்கிறவன் கர்த்தர் ன்னான், அதிலேயும் சிலபேரு மேரியக் கும்பிடாதேன்னான். கிறிஸ்தவ மதத்திலேயே ஏழு, எட்டு உட்பிரிவுகளை உண்டாக்கிட்டான்.

மத்திய ஆசியாவிலிருந்து வந்தவன், அக்கினி பகவான், ருத்ரன், வாயு பகவான்னு நூறு சாமியச் சொன்னான். நம்ம நாட்டு பூர்வீகக் குடிமக்களான திராவிடர்கள் காத்தவராயன், கழுவடையான், முனியன், வீரன்னு கும்பிட்டான்.

எந்தக் கடவுள் வந்து இவன்கிட்டே 'என் பேரு இதுதான்னு சொன்னான்..?' அவனவனும் அவனவன் இஷ்டத்துக்கு ஒரு சாமிய உருவாக்கினான். ஒவ்வொரு வட்டாரத்துல உருவான ஒவ்வொரு மகானும் ஒரு கடவுள உண்டாக்கி, எல்லாரும் தன் கட்சியில சேரும்படியா செஞ்சான். சுருக்கமாக சொல்லனும்னா காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் - தி.மு.க. மாதிரி ஒவ்வொரு மதமும் ஒரு கட்சி. யார் யாருக்கு எதிலே லாபமிருக்கோ அதுல சேந்துக்குறான்.

மதம் மனிதனுக்குச் சோறு போடுமா? அவன் கஷ்டங்களப் போக்குமா? இந்தக் குறைந்தபட்ச அறிவுகூட வேண்டாமா மனுசனுக்கு? உலகத்துல இருக்கிற ஒவ்வொரு மதமும், நீ பெரிசா ? நான் பெரிசான்னு மோதிக்கிட்டு ரத்தம் சிந்துதே! நாட்டுக்கு நாடு யுத்தமே வருதே! இப்படியெல்லாம் அடிச்சிக்கிட்டு சாகச் சொல்லி எந்த ஆண்டவன் சொன்னான்..?"



என்று கேள்வி எழுப்பினாராம்.

படிக்காத மேதைக்கே இத்தனை பகுத்தறிவுச் சிந்தனை இருக்கும்போது, படித்த மேதைகளுக்கு இதனைவிட இன்னும் எத்தனை அதிகமான பகுத்தறிவு சிந்தனை இருக்கவேண்டும் சொல்லுங்கள்..?

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com

தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc

குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

# பிரெஞ்சு தேசச் செய்திகள்

### மக்ரோன் டிரம்புடன் வெள்ளை மாளிகையில் சந்திப்பு

## ஈரான் அணுத்திட்டம் குறித்து பிரான்ஸ் உறுதி

ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து (2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட) பின்வாங்கப் போவதில்லை என்று பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (இந்த அணுத்திட்ட ஒப்பந்தம் குறித்த மேலதிக செய்திகளை உலகச் செய்திப் பக்கத்தில் பார்க்கவும்)

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் மற்றும் முதல் பெண்மணி பிரிஜித் மக்ரோன் ஆகியோர், கடந்த 23ம் திகதி அமெரிக்கா சென்றிருந்தனர். இது மக்ரோனின் முதல் அமெரிக்க பயணமாகும். மக்ரோன், ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், பிரான்சின் தேசிய தின நிகழ்வுக்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினை அழைத்திருந்தார். அதன் பின்னரும் இருவரும் சந்திப்பு நிகழ்த்தியிருந்தனர். இந்நிலையில், இம்மானுவல் மக்ரோன் மற்றும் அவரது மனைவி பிரிஜித் மக்ரோன் மூன்று நாட்கள் சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்று திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தைக் கைவிடப் போவதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறிவரும் நிலையில், டிரம்பைச் சந்தித்துப் பேசிய மக்ரோன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் இமானுவல் மக்ரான் பேசியதாவது: ஈரானில் அணுசக்தி பரிசோதனைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நாட்டுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவின் முன்முயற்சியில் உருவாக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் நாங்களும் கையெழுத்திட்டோம். அந்த ஒப்பத்தில் அமெரிக்காவும் கையெழுத்திட்டுள்ளது. எனவே, இந்த ஒப்பந்தத்தை விட்டு விட்டு விலகி விடுவோம் என்று சுலபமாகக் கூறிவிட முடியாது. அந்த ஒப்பந்தத்தில் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு இருப்பதாகச் சொல்ல முடியாது. இருந்தாலும், அதைக் காரணம் காட்டி ஒப்பந்தத்தைக் கைவிடுவதைக் காட்டிலும், அதிலுள்ள குறைபாடுகளைக் களைவதில் நாம் முனைப்பு காட்ட வேண்டும். இந்த ஒப்பந்தம் குறித்த அமெரிக்காவின் அனைத்து கவலைகளுக்கும் தீர்வு கிடைக்கச் செய்வதற்காக ஒருங்கிணைந்து செயல்பட நாம் முன்வர வேண்டும். ஈரான் ஒருபோதும் அணு ஆயுத பலம் பெறாது என்பதை உறுதி செய்வதே அணுசக்தி ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கமாகும். ஆனால், அதற்காக மத்திய கிழக்குப் பகுதியில் நாம் போரிட முடியாது என்றார் அவர்.

இதேவேளை, ஜேர்மன் சான்சலர் ஏங்கலா மெர்கலும் அமெரிக்கா சென்று இந்த ஒப்பந்தத்தை நிராகரிக்கக் கூடாது என டிரம்பிடம் வலியுறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது.

இதுஇவ்வாறிருக்க, பரிஸ் பருவநிலை உடன்பாட்டில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளது. இந்நிலையில் அந்த ஒப்பந்தத்தின்படி அமெரிக்கா ஏற்கனவே அளிப்பதாக ஒப்புக் கொண்ட நிதியான 4.5 மில்லியன் டொலர்களை செலுத்துவதற்கு தான் தயாராக உள்ளதாக நியூயோர்க் நகரின் முன்னாள் நகரபிதாவான மைக்கேல் ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளார்.

## கைகுலுக்க மறுத்த பெண்ணுக்கு பிரான்சில் குடியுரிமை வழங்கு மறுப்பு

பிரான்சில் குடியுரிமை வழங்கிய அதிகாரியுடன் கைகுலுக்க மறுத்த அல்ஜீரிய நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய பெண்ணுக்கு பிரான்ஸ் அரசு குடியுரிமை வழங்குவதை மறுத்துள்ளது. அல்ஜீரியாவைச் சேர்ந்த இஸ்லாமிய பெண் ஒருவர், 2010ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நபரை திருமணம் செய்தார். அதன் பின்னர், சில ஆண்டுகள் கழித்து தனக்கு பிரான்ஸ் குடியுரிமை வேண்டும் என விண்ணப்பித்தார். இதனைத் தொடர்ந்து 2016ம் ஆண்டு தென் கிழக்கு ஜஸலீசந பிராந்தியத்தில் நடந்த குடியுரிமை கொடுப்பதற்கான விழாவில் கலந்து கொள்ள அப்பெண்ணிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த விழாவில் கலந்து கொண்ட அப்பெண்ணிற்கு வாழ்த்துக்கள் கூறிய பிரான்ஸ் அதிகாரி, அவருடன் கை குலுக்க முன்வந்தார்.




ஆனால், தங்கள் மத வழக்கப்படி கைகுலுக்குவதில்லை எனக் கூறி அப்பெண் மறுத்துவிட்டார். இதனை ஏற்றுக் கொள்ளாத பிரான்ஸ் அதிகாரி, கைகுலுக்க மறுப்பவர் எங்கள் நாட்டு பிரசை ஆக முடியாது எனக் கூறியதுடன், அவரின் பிரான்ஸ் குடியுரிமையையும் மறுத்துவிட்டார். இதனையடுத்து 2017ம் ஆண்டு, அப்பெண் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நிலையிலும் சாதகமான தீர்ப்பு வரவில்லை.

இதன் பின்னர், குறித்த பெண் மேல்முறையீடு செய்தபோதும் நீதிமன்றம் அவருக்கு குடியுரிமை பெறும் தகுதி இல்லை என தெரிவித்துள்ளது. அத்துடன், சட்டம் தவறாக பயன்படுத்தப்படவில்லை என மாநில சபையும் அவருக்கு விளக்கம் அளித்துள்ளது.

### பரிஸ் தாக்குதல் பயங்கரவாதிக்கு

## பெல்ஜியம் 20 ஆண்டு சிறை வழங்கியது!

பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களில், உயிருடன் காணப்பட்ட ஒரேயொரு நபரான அப்தெஸ்லாம் சாலாமுக்கு, பெல்ஜிய நீதிமன்றமொன்று, 20 ஆண்டுகளுக்குச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி பிரான்ஸ் தலைநகர் பரிசில் பயங்கரவாதிகள் 7 இடங்களில் துப்பாக்கி சூடும், தற்கொலைப்படை தாக்குதலும் நடத்தினர். இதில் 130 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். தாக்குதலில் ஈடுபட்ட 9 பயங்கரவாதிகளில் 8 பேர் கொல்லப்பட்டுவிட்டனர். எஞ்சிய ஒரே பயங்கரவாதியான அப்தேசலாமை (வயது 28) பிடிக்க பிரான்ஸ் காவல்துறையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அவர் பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸ் நகரில் ஒரு அடுக்குமாடி வீட்டில் பதுங்கியிருப்பதாக தகவல் கிடைத்தது. 2016ம் ஆண்டு மார்ச் 15ம் திகதி அவனை பிடிக்க பிரசல்ஸ் காவல்துறையினர் சென்றபோது அப்தே சலாம் அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினான். எனினும் காவல்துறையினர் அவனையும், அவனுடைய கூட்டாளி அயாரி (24) என்பவனையும் துப்பாக்கியால் சுட்டு மடக்கிப் பிடித்தனர். பின்னர் அப்தே சலாம் பிரான்ஸ் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டான். இவர்கள் கைதான அடுத்த சில நாட்களில் பிரசல்ஸ் நகர விமான நிலையத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கும் இவர்களது கூட்டாளிகளே காரணம் என்பது தெரியவந்தது.



இந்த நிலையில் பெல்ஜியம் நாட்டில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக தொடரப்பட்ட வழக்கில் அப்தெஸ்லாம், அயாரி ஆகியோர் மீதான விசாரணை பிரசல்ஸ் நீதிமன்றில் நடந்து வந்தது. இந்த வழக்கில் கடந்த வாரம் தீர்ப்பு கூறப்பட்டது. அப்போது இருவரும் பயங்கரவாதிகள் என்பதில் சந்தேகமில்லை என்று கூறிய நீதிபதி மேரி பிரான்ஸ், இருவருக்கும் தலா 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தார். தீர்ப்பின்போது, அப்தேசலாம், ஆயரி ஆகிய இருவருக்கும் மதவெறிக் கொள்கைகளின் மீது உள்ள தீவிர பிடிப்பு குறித்து யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. எனவே, இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்குரைஞர்கள் கடந்த பெப்ரவரி மாதம் கோரியிருந்தபடி, இருவருக்கும் 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் தெரிவித்தனர்.

இவ்வழக்குத் தொடர்பான முதலாவது அமர்வில், சாலா கலந்துகொண்டபோதிலும், முஸ்லிம்களுக்கு எதிரானதாக நீதிமன்றம் காணப்படுகிறது எனக் குற்றஞ்சாட்டியதோடு, ஏனைய அமர்வுகளில் கலந்துகொள்ள மறுத்திருந்தார். அத்தோடு, தனது நம்பிக்கை முழுவதையும், அல்லாவின் மீது மாத்திரமே கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்படும்போது அப்தெஸ்லாம், ஆயரி ஆகிய இருவருமே நீதிமன்றத்தில் இருந்திருக்கவில்லை. பரிஸ் தாக்குதல் தொடர்பாக நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்காக, அப்தேசலாம் பிரான்ஸ் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார்.

## பிரான்சில் வெற்றிகரமாக நடந்த முக மாற்று அறுவை சிகிச்சை!

பிரான்சில் முகம் முழுவதும் சிதைவடைந்த கட்டிகளால் பாதிக்கப்பட்டு கோரமாக இருந்த நபருக்கு 3 முறை முக மாற்று அறுவை சிகிச்சை நடந்த நிலையில் தான் 20 வயது குறைந்துள்ளதாக உற்சாகமடைந்துள்ளார். பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர் ஜெரோம் ஹமொன் (43) மரபியல் மாற்று காரணமாக நியூரோபைபிரோ மெடோ சிஸ் என்ற நோயினால் பாதிக்கப்பட்டார். இதனால் 2010 யூலை மாதம் முதல் முறையாக முக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதுதான் உலகளவில் முதல்முறையாக முகம் முழுவதும் செய்யப்பட்ட முக மாற்று அறுவை சிகிச்சையாகும். இந்நிலையில் காய்ச்சலுக்காக சில அன்ரிபயோடிக் மருந்துகளை ஜெரோம் சாப்பிட்ட நிலையில் அது அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதையடுத்து சத்திரசிகிச்சை செய்யப்பட்ட அவரின் புதிய முகம் கடந்தாண்டு நவம்பரில் நீக்கப்பட்டது.





முகம் இல்லாமல் ஜெரோம் மருத்துவமனையில் இரண்டு மாதங்கள் வைக்கப்பட்டிருந்த நிலையில், தோல்கள் தானமாக கிடைப்பதற்காக காத்திருந்தார். இந்நிலையில் ஜனவரியில் 22 வயதான இளைஞர் உயிரிழந்த நிலையில் அவரின் தோல்கள் ஜெரோமுக்கு பொருத்தப்பட்டு மீண்டும் முக மாற்று அறுவைசிகிச்சை செய்யப்பட்டது. இதையடுத்து அவருக்கு புதிய முகம் கிடைத்துள்ளது. ஆனாலும் மண்டை ஓடு, தோல் மற்றும் அது தொடர்புடைய அம்சங்கள் இன்னும் முழுமையாக ஜெரோமுக்கு சீரமைக்கப்பட வேண்டும்.

ஜெரோம் கூறுகையில், என் முக அடையாளம் மாறிவிட்டது. இது என்னுடைய முகமில்லை. ஆனாலும் இது நான்தான். 22 வயதுடைய நபரின் தோல்கள் வைக்கப்பட்டுள்ளதால் எனக்கு 20 வயது குறைந்தது போல் உணர்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். தற்போது மருத்துவமனையிலேயே தங்கியிருக்கும் ஜெரோம் தொடர்ந்து சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்.

### புதிய குடியேற்றச் சட்டம்

பிரான்ஸ் நாட்டில் குடியேறும் அகதிகளுக்கான விதிகளை கடுமையாக்கும் புதிய குடியேற்ற சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. அகதிகளின் மனுக்களுக்கு வழங்கப்படும் காலக்கெடு குறைப்பு, சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்கான சிறைத்தண்டனை உள்ளிட்ட பல விடயங்கள் அந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

# ஒப்பந்தத்தைக் கைவிட்டால் அணு ஆயுதம் தயாரிப்போம்

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

## சதியை முறியடிப்போம் என ரஷ்யா, சீனா சூளுரை!

அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகினால், அணு ஆயுதங்களில் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் யுரேனியத்தை செறிவூட்டும் பணியை மீண்டும் தொடங்குவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து அமெரிக்கா சென்றுள்ள ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகமது ஜாவத் ஸரீஃப் நியூயோர்க் நகரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அணுசக்தி தொடர்பாக ஈரானுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே 2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலிருந்து விலகப் போவதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறி வருகிறார்.

அவ்வாறு அவர் அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகினால், அதற்கான எதிர் நடவடிக்கைகள் குறித்து தற்போதே ஆலோசித்து வருகிறோம். அந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அத்தகைய எதிர் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

அதற்காக, ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கி



விடும் என்று அமெரிக்கா அச்சப்படத் தேவையில்லை. இருந்தாலும், அணு ஆயுதத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் யுரேனியத்தை செறிவூட்டும் பணியில் ஈரான் தீவிரமாக ஈடுபடலாம் என்றார் அவர்.

தனது அணுசக்தித் திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வல்லரசு நாடுகளும் ஒப்புக்கொண்டு, இரு தரப்பினருக்கும் இடையே ஒஸ்ரியா தலைநகர் வியன்னாவில் 2015ம் ஆண்டு மே மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஒபாமா அதிபராக இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியின் பலனாக உருவான இந்த ஒப்பந்தம், அமெரிக்கா மேற்கொண்டதிலேயே மிகவும் மோசமான ஒப்பந்தம் என்று தற்போதைய அதிபர் டொனால்ட் டிரம்ப் விமர்சித்து வருகிறார். மேலும், தான் ஆட்சிக்கு வந்தால் ஈரானுடான அணு சக்தித் திட்டத்தைக் கைவிடப்போவதாக அதிபர் தேர்தல் பிரசாரத்தின்போது டிரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்படி, ஈரான் அணுசக்தி ஒப்பத்தில் உள்ள குறைபாடுகள் களையப்பட வேண்டும் அல்லது ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகிவிடும் என்று அண்மையில் டொனால்ட் டிரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தால். இந்தச் சூழலில், அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹானி தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியளிக்கையில், ஈரானுக்கும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 வல்லரசு நாடுகளுக்கும் இடையே அணு சக்தி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அதில், அணு சக்தியை ஆக்கபூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவோம் என்றும் நாங்கள் தெரிவித்திருந்தோம். இதன் காரணமாக எங்கள் நாட்டின் மீது இருந்த பொருளாதார தடைகள் நீக்கப்பட்டன. இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்று கூறி வருகிறார். ஈரான் அணு ஆயுத சோதனைகள் மேற்கொள்வதைத் தடுப்பதற்காக ஈரான் மீது புதிய பொருளாதாரத் தடைகளையும் டிரம்ப் விதித்துள்ளார். அமெரிக்கா அதன் அணு ஆயுத ஒப்பந்தங்களில் உறுதியாக இல்லாவிட்டால் அந்நாடு கடுமையான விளைவுகளை சந்திக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, ஈரானுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தைக் குலைப்பதற்காக நடைபெறும் சதிச் செயல்களை ரஷ்யாவும், சீனாவும் முறியடிக்கும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் தெரிவித்துள்ளார். சீனா சென்றுள்ள லாவ்ரோவ் அந்த நாட்டுத் தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த 23ம் திகதி சந்தித்தபின் இதுகுறித்து கூறியதாவது: சர்வதேச சட்ட திட்டங்களை நம்பியே ஐ.நா. செயல்பட்டு வருகிறது. இத்தகைய சட்ட திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்க சிலர் முயன்று வருகின்றனர்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைக் குலைக்கும் சதிச் செயலில் யாராவது ஈடுபட்டால், அந்த முயற்சியை முறியடிக்க வேண்டும் என்பதில் ரஷ்யாவும், சீனாவும் மிக உறுதியுடன் உள்ளன. ஈரான் அணுசக்தி ஒப்பந்தம், அண்மை வரலாற்றில் பேச்சுவார்த்தையை மட்டுமே பயன்படுத்தி எட்டப்பட்ட மிகச் சிறந்த சமாதான உடன்படிக்கையாகும். அந்த ஒப்பந்தத்தை யாரும் சீர்குலைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார் அவர்.

இதேவேளை, ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாக்குமாறு அணு ஆயுதத் தடுப்புக்கான ஐ.நா. பிரிவை ரஷ்யாவும், சீனாவும் கேட்டுகொண்டுள்ளது. இதுகுறித்து சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் கடந்த 24ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்த மதிப்பாய்வுக் கூட்டத்தில், ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் ஆயுதக் கட்டுப்பாட்டுப் பிரிவுத் தலைவர் விளாதிமீர் யெர்மாகோவ் பேசினார். அப்போது அவர் கூறுகையில், வல்லரசு நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே 2015ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தைக் கைவிட அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது. இதன் காரணமாக, அந்த ஒப்பந்தமே முறிந்துவிடும் ஆபத்தில் இருக்கிறது. எனவே, அந்த ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கான ஆதரவை ஐ.நா. அணு ஆயுதத் தடுப்புப் பிரிவு வழங்க வேண்டும். தனது சொந்த விருப்பத்துக்காக அந்த ஒப்பந்தத்தை யாராவது குலைத்தால் கடும் பின் விளைவுகள் ஏற்படும் என்று அவர் எச்சரித்தார்.

## கடவுச்சீட்டில் சிங்கப்பூர் முதலிடம், சிறீலங்கா 93வது இடம்

உலகின் பலம் வாய்ந்த கடவுச்சீட்டு பட்டியலில் சிங்கப்பூர் 164 புள்ளிகளுடன் முதலிடம் பெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் 199 நாடுகளுக்கு இடையிலான, கடவுச் சீட்டு தரப்படுத்தலுக்கு அமைய 'பாஸ்போர்ட் பவர் ரேங் இண்டெக்ஸ் –2018' (passport power rank 2018)' எடுக்கப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது. மேலும், குறித்த பட்டியலில் 163 புள்ளிகளுடன் தென் கொரியா இரண்டாம் இடத்திலும் 162 புள்ளிகளுடன் ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் மூன்றாம் இடத்திலும் உள்ளன. நான்காம் இடத்தில் 161 புள்ளிகளுடன் பிரான்ஸ், ஸ்பெயின், பின்லாந்து, இத்தாலி, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகள் பெற்றுள்ளன.

சிறீலங்கா 39 புள்ளிகளுடன் 93ம் இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது 199 நாடுகள் கொண்ட இப்பட்டியலில் கிட்டத்தட்ட 189வது இடத்தில் சிறீலங்காவின் கடவுச்சீட்டு இருக்கின்றது. சிறீலங்காவுடன் 39 புள்ளிகளைப் பெற்று பங்களாதேஷ், ஈரான் மற்றும் எரித்திரியா நாடுகள் இருக்கின்றன. இதேவேளை ஆப்கானிஸ்தான் 25 புள்ளிகளைப் பெற்று கடைசி இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. விசா கெடுபிடிகளைக் கருத்தில் கொண்டே இந்தப் புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பொக்கிசம்

பசிபிக் பெருங்கடலில் அரிய வகை தாதுக்கள் அடங்கிய தீவு ஒன்றை ஜப்பான் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஜப்பானின் டோக்கியா நகரின் தென்கிழக்கில் 1,150 மைல்கள் தொலைவில் உள்ளது மினாமி தொரிசிமா Minami-Torishima . ஜப்பான் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள குறித்த தீவின் தற்போதைய மதிப்பு சுமார் 360 பில்லியன் பவுண்ட்ஸ் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆய்வாளர்களின் இந்த கண்டு



பிடிப்பானது ஜப்பானுக்கு திருப்புமுனையாக அமையும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த தீவில் சுமார் 16 மில்லியன் தொன் அரியவகை உலோகங்கள் கொட்டிக் கிடப்பதாக ஜப்பான் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த உலோகங்களால் உலகமெங்கும் உயர் இலத்திரனியல் தயாரிப்புகள் பல உருவாக்க முடியும் எனவும் ஜப்பானிய நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமின்றி செல்பேசிகள், மின்சார வாகனங்கள், ராடார் சாதனங்கள் மற்றும் ஏவுகணை அமைப்புகள் என பலவற்றையும் குறித்த தீவில் இருந்து கிடைக்கும் உலோகங்களால் உருவாக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட அரிய உலோகங்களில் ஒன்று இயிற்றியம் (லுவவசரைஅ). இதன் தற்போதை சந்தை மதிப்பானது பவுண்ட் ஒன்றுக்கு 3,400 டொலராகும். இயிற்றியம் உலோகத்தால் செல்பேசித் திரைகள் மற்றும் கமெரா லென்ஸ்கள் தயாரிக்கலாம்.

## 95 வீத மக்கள் ஆரோக்கியமற்ற சுவாசம்

உலகில் 95 சதவீத மக்கள் சுகாதாரக் குறைவான காற்றை சுவாசிப்பதாக சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்று கூறியுள்ளது. நகரமயமாக்கல் காரணமாக

### சிரியாவில் மாட்டிய குற்றவாளி

அமெரிக்காவில் 2001ம் ஆண்டு செப்டெம்பர் 11ம் திகதி நடத்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதல்களில் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளில் ஒருவரான முகமது ஹைதர் ஜம்மார் என்பவர் சிரியாவில் அமெரிக்க கூட்டு படையினரிடம் பிடிபட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன் அறிவித்துள்ளது.

### ரஹ்மானின் பெயரில் கனடாவில் வீதி!

கனடா, ஒன்ராரியோவில் உள்ள ஒரு வீதிக்கு பிரபல தமிழ் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'அல்லா–ராகா




ரஹ்மான் வீதி' என அந்த வீதிக்குப் பெயரிடப்பட்டுள்ளது. தனது திறமை உழைப்பால் முன்னேறி இன்று உலகளவில் பெருமைபெற்றதுடன் ஒஸ்கார் விருதையும் ஏ.ஆர்.ரஹ்மான் வென்றுள்ளார்.

### ஜேர்மனியில் முதல் பெண்

ஜேர்மனியில் ஆளும் கட்சியின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சமூக ஜனநாயகவாதிகள் (எஸ்.பி.டி) கட்சியின் 154 ஆண்டு வரலாற்றில் முதல் முறையாக பெண் ஒருவர் அக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 47 வயதாகும் ஆண்ட்ரியா நஹில்ஸ் ஜேர்மனியின் முன்னாள் தொழிற் துறை அமைச்சராவார். ?

### 5வது இடத்தில்

இளவரசர் வில்லியம் – கதே மிடில்டன் தம்பதியருக்கு கடந்த 23ம் திகதி திங்கள்கிழமை ஆண் குழந்தை



பிறந்தது. இது இவர்களின் 3வது குழந்தை. இலண்டனிலுள்ள கென்ஸிங்ஸ்டன் அரண்மனையில் பிறந்த இந்தக் குழந்தை, அரசர் பட்டத்துக்கு தகுதியுடையவர்கள் வரிசையில் 5வது இடத்தில் உள்ளது.

### மியான்மர் சென்ற முதல் குடும்பம்

மியான்மரில் நடந்த இன கலவரங்களால் அங்கிருந்து சுமார் 7 இலட்சம் ரோஹிங்கியோ முஸ்லிம் மக்கள் அகதிகளாக வங்காளதேசத்தில் தஞ்சம் அடைந்தனர். மீண்டும் அவர்களை மியான்மரில் குடியமர்த்த உடன்பாடு

16

ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து வங்காளதேசத்தில் இருந்து 5 பேரை கொண்ட முதல் குடும்பம் மியான்மர் போய் சேர்ந்துள்ளது.

## மேல்முறையீடு தேவையில்லை

ஊழல் வழக்கில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள 24 ஆண்டு சிறைத் தண்டனையை எதிர்த்து முறையிடுவதில்லை



என்று தென் கொரிய முன்னாள் அதிபர் பார்க் கியூன்–ஹை முடிவு செய்துள்ளார். இந்நிலையில், தனது சகோதரி தனக்கு விதிக்கப்பட்டுள்ள 24 ஆண்டு சிறைத் தண்டனையை எதிர்த்து தாக்கல் செய்துள்ள மனுவை விசாரிக்க வேண்டாம் என்று கோரி, முன்னாள் அதிபர் பார்க் கியூன்–ஹை நீதிமன்றத்தில் எதிர் மனு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீடு தொடர்பாக விசாரணை நடைபெற்றாலும், அதனை அவர் புறக்கணிப்பார் என்று கூறப்படுகிறது.

## மகன் முன்பு நிர்வாணமாக இருக்கும் நடிகை

அமெரிக்க நடிகையும், மொடலுமான ஆம்பர் ரோஸ் கணவரை விவாகரத்து செய்து விட்டு தன்னுடைய 5



வயது மகனுடன் வசித்து வருகிறார். இந்நிலையில் அவர் கூறிய ஒரு விடயம் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. எங்கள் வீட்டில் நான் என் மகன் முன்பு எப்பொழுதுமே நிர்வாணமாக தான் இருப்பேன். இந்த வயதிலேயே என் மகனுக்கு பெண்ணின் உடல் உறுப்புகள் பற்றி நன்கு தெரியும் என்று ஆம்பர் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது, பெண்கள் நிர்வாணமாக இருப்பதை பார்த்தாலும் என் மகன் சாதாரணமாக இருக்க வேண்டும் என்பதால் நான் அவன் முன்பு நிர்வாணமாக காட்சியளிக்கிறேன். அவன் பெண்களை மதிப்பவனாக வளர வேண்டும். அவன் பெண்ணியவாதியாக வருவான். அவன் நண்பர்களை, ஒப்பிடும்போது அவனுக்கு பெண்களின் உடல் பற்றி நன்கு தெரியும் என்று கூறியுள்ளார்.

## உலகின் மூத்த பெண் மரணம்

உலகின் மிக வயதான ஜப்பானிய பெண் தனது 117வது வயதில் மரணம் அடைந்துள்ளார். ஜப்பான் நாட்டில் ககோஷிமா மாகாணத்திற்கு உட்பட்ட கிகாய் என்ற நகரில் வசித்து வந்தவர் நபி தஜிமா (வயது 117). 1900ம் ஆண்டில் பிறந்த இவர் 19வது நூற்றாண்டை சேர்ந்த கடைசி நபர் என தெரியவந்துள்ளது. அவருக்கு பேர குழந்தைகள் என 160 பேர் உள்ளனர். ஜமைகா நாட்டை சேர்ந்த வயலட் பிரவுன் என்பவர் கடந்த

→ 17

வளரும் நாடுகளில் இப்பிரச்சனை நீடிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்துள்ள காற்றுமாசு அளவை, 60 சதவீத நாடுகள் இன்னும் எட்டவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. காற்று மாசால் கடந்தாண்டு இறந்த 50 இலட்சம் பேரில் பாதிக்கும் மேற்பட்டோர் சீனா மற்றும் இந்தியாவை சேர்ந்தவர்கள் என்றும் ஆய்வில் கூறப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டில் கிட்டத்தட்ட 2.5 பில்லியன் மக்கள் காற்று மாசு பாதிப்புக்கு ஆளானார்கள் என்றும் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 2010ம் ஆண்டை ஒப்பிடும் போது காற்று மாசுபாட்டின் அளவு மிக அதிக அளவில் அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது என்றும் கூறியுள்ளனர்.

## கனடாவில் பொது மக்கள் மீது வாகனத் தாக்குதல் சிறீலங்காப் பெண் உட்பட 10 பேர் பலி

கனடாவில் இளைஞர் ஒருவர் வாகனத்தால் மோதிப் 10 பேரைப் படுகொலை செய்துள்ளார். வாகனத்தை ஓடிக்கொண்டு வந்த அலெக் மினாசியன் (25) என்ற இளைஞர், வேண்டுமென்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது: கனடாவின் மிகப் பெரிய நகரான டொரன்டோவின் வர்த்தக மையமான நோர்த் யோர்க் நகர மையத்தில் (சிற்றி சென்டர்), கூட்டமாகச் சென்று கொண்டிருந்த பாதசாரிகள் மீது வேகமாக வந்த வான் மோதி, அவர்களை நசுக்கிச் சென்றது.

வாடகைக்கு எடுக்கப்பட்ட ரைடர் ரக வெள்ளை நிற வான் ஏராளமான பாதசாரிகள் மீது மோதியதாகவும், இதில் பலர் தூக்கி எறியப்பட்டதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 23ம் திகதி திங்கள்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர், 15 பேர் காயமடைந்தனர். பாதசாரிகள் மீது மோதியவாறு 2.3 கி.மீ. வரை சென்ற அந்த வான், சேதமடைந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய நபரை காவல்துறையினர் கைது செய்ய முயன்றபோது, அவர்




தனது கையிலிருந்த செல்பேசியை துப்பாக்கியைப் போல் பிடித்தவாறு பாவனை செய்தார்.

மேலும், காவல்துறையினரிடம் தனது தலையில் சுடுமாறு அந்த நபர் உரக்கக் கூறினார். இந்த செய்கைகள் மூலம், தன்னை சுட்டுக் கொல்வதற்காக காவல்துறையினரை தூண்டியதாகக் கூறப்படுகிறது. எனினும், அந்த நபரை காவல்துறையினர் காயப்படுத்தாமல் மடக்கிப் பிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில், தாக்குதல் நிகழ்த்திய நபர் டொரன்டோ நகரின் வடக்கு புறநகர் பகுதியைச் சேர்ந்த அலெக் மினாசியன் என்று தெரியவந்தது. அவர் வேண்டுமென்றே இந்தத் தாக்குதலை நிகழ்த்தியதாக தெரிவித்தாலும், பயங்கரவாத அமைப்புகளுடன் அவருக்குத் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினர். அலெக் மினாசியன் சிறப்பு தேவைகள் உள்ள மாணவர்களுக்கான பாடசாலையில் படித்ததாக அவருடன் பயின்ற முன்னாள் மாணவர்கள் கூறியுள்ளனர்.

இதுகுறித்து கனடா பொதுமக்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரால்ஃப் கூடேல் கூறுகையில், இந்த வான் தாக்குதலால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். அதேவேளை, சாட்சியங்கள் முன்வர வேண்டும் என்றும், இந்த சம்பவம் தொடர்பாக நீண்ட விசாரணை நடைபெறும் என்றும் டொரோண்டாவின் காவல் துணை தலைவர் தெரிவித்துள்ளார் மேலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் சாட்சியங்களுக்கு உதவ தொலைப்பேசி சேவை மையம் அமைக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# உலகின் இராணுவ பலம் வாய்ந்த நாடுகள்

உலகில் இராணுவ பலம் வாய்ந்த முதல் 50 நாடுகளின் பட்டியலை சர்வதேச ஊடகமான 'ரொய்டர்ஸ்' வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பாதுகாப்பு செலவினம் (ஆண்டொன்றுக்கு), மொத்தப் படை பலம் (முப்படைகள்), மற்றும் போர்த் தளவாடங்களின் எண்ணிக்கை என்பவை பட்டியலிடப்பட்டு அதன் அடிப்படையில் இந்தப் பலம் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் நாடாக எது இருக்கும் என்பது நீங்கள் அனைவரும் ஊகிக்கக்கூடியதே. எனினும், முதல் 50 நாடுகள் கொண்ட அந்தப் பட்டியலை மேலிருந்து கீழாக இங்கே தொடர்ந்து தருகின்றோம்.

**40வது இடத்தில்**
**கொலம்பியா**
பாதுகாப்பு செலவு –
12.1 பில்லியன் டொலர் (12,145,000,000)
இராணுவ பலம் – 511,550 படையினர்
போர் விமானங்கள் – 457
டாங்கிகள் – 0
இராணுவ போர் வாகனங்கள் – 1345
கடற்படை கப்பல்கள் – 234
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 11



**39வது இடத்தில்**
**பெரு**
பாதுகாப்பு செலவு –
2.6 பில்லியன் டொலர் (2,560,000,000)
இராணுவ பலம் – 369,330 படையினர்
போர் விமானங்கள் – 267
டாங்கிகள் – 85
இராணுவ போர் வாகனங்கள் – 890
கடற்படை கப்பல்கள் – 60
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**38வது இடத்தில்**
**நெதர்லாந்து**
பாதுகாப்பு செலவு –
9.8 பில்லியன் டொலர் (9,840,000,000)
இராணுவ பலம் – 53,205 படையினர்
போர் விமானங்கள் – 164
டாங்கிகள் – 0
இராணுவ போர் வாகனங்கள் – 979
கடற்படை கப்பல்கள் – 56
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 4

**37வது இடத்தில்**
**சுவிச்சர்லாந்து**
பாதுகாப்பு செலவு –
4.8 பில்லியன் டொலர் (4,830,000,000)
இராணுவ பலம் – 171,000 படையினர்
போர் விமானங்கள் – 183
டாங்கிகள் – 134
இராணுவ போர் வாகனங்கள் – 1032
கடற்படை கப்பல்கள் – 0
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0



**36வது இடத்தில்**
**நோர்வே**
பாதுகாப்பு செலவு –
7 பில்லியன் டொலர் (7,000,000,000)
இராணுவ பலம் – 72,500 படையினர்
போர் விமானங்கள் – 106
டாங்கிகள் – 52
இராணுவ போர் வாகனங்கள் – 684
கடற்படை கப்பல்கள் – 62
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**35வது இடத்தில்**
**ஆர்ஜென்ரீனா**
பாதுகாப்பு செலவு –
4.3 பில்லியன் டொலர் (4,330,000,000)
இராணுவ பலம் – 127,720 படையினர்
போர் விமானங்கள் – 248
டாங்கிகள் – 390
இராணுவ போர் வாகனங்கள் – 828
கடற்படை கப்பல்கள் 42
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 3

**34வது இடத்தில்**
**மெக்சிக்கோ**
பாதுகாப்பு செலவு –
7 பில்லியன் டொலர் (7,000,000,000)
இராணுவ பலம் – 383,575 படையினர்
போர் விமானங்கள் – 452
டாங்கிகள் – 0
இராணுவ போர் வாகனங்கள் – 695
கடற்படை கப்பல்கள் – 143
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0



**33வது இடத்தில்**
**மலேசியா**
பாதுகாப்பு செலவு –
4.7 பில்லியன் டொலர் (4,700,000,000)
இராணுவ பலம் – 420,000 படையினர்
போர் விமானங்கள் – 232
டாங்கிகள் – 74
இராணுவ போர் வாகனங்கள் – 1318
கடற்படை கப்பல்கள் – 61
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 2

**32வது இடத்தில்**
**செக் குடியரசு**
பாதுகாப்பு செலவு –
2.2 பில்லியன் டொலர் (2,220,000,000)
இராணுவ பலம் – 29,050 படையினர்
போர் விமானங்கள் – 109
டாங்கிகள் – 123
இராணுவ போர் வாகனங்கள் – 518
கடற்படை கப்பல்கள் – 0
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0

**31வது இடத்தில்**
**மியன்மார்**
பாதுகாப்பு செலவு –
2.4 பில்லியன் டொலர் (2,400,000,000)
இராணுவ பலம் – 516,000 படையினர்
போர் விமானங்கள் – 249
டாங்கிகள் – 592
இராணுவ போர் வாகனங்கள் – 1358
கடற்படை கப்பல்கள் – 155
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0

மிகுதி அடுத்த இதழில்...

# சீனாவின் அதிநவீன போர் விமானங்கள் சேவையில் இணைப்பு

# புலனாய்வுத் தகவல் வழங்க புதிய இணையத்தளம்!

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, ரடார் கண்களுக்குப் புலப்படாத அதி நவீன J-10c போர் விமானங்களை சீனா தனது விமானப் படை சேவையில் கடந்த 16ம் திகதி இணைத்தது. ஒலியைவிட மிக வேகமாகப் பறக்கும் இந்த விமானங்கள், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், பல்வேறு நவீன ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொண்டவை. இந்த விமானங்கள், மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

எதிரிகளின் வான் எல்லைக்குள் இரகசியமாக ஊடுருவி, இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் திறன் இந்த விமானங்களுக்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. தரை இலக்குகள் மட்டுமின்றி, கடலிலும் உள்ள இலக்கு



களைத் தாக்கும் திறன் கொண்ட இந்த விமானங்கள், குறுகிய தொலைவு மற்றும் நடுத்தரத் தொலைவுப் பகுதிகளில் தாக்குதல் தொடுக்கக் கூடியவை என்று சீன விமானப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, நான்காம் தலைமுறையைச் சேர்ந்த ஜே–20 ரக ரடார் மறைவு போர் விமானங்கள் சீன விமானப் படையில் கடந்த பெப்ரவரி மாதம் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த விமானங்கள், நடுத்தர மற்றும் தொலைதூர இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை. இதுவும் ஒலியை விட அதிக வேகத்தில் பறக்கக் கூடியது. இந்த நிலையில், தற்போது ஜே–10சி விமானமும் விமானப் படையில் சேர்க்கப்பட்டுள்ளது. வான் பாதுகாப்பில் சீனாவின் பலத்தை அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேவேளை, குறைந்த தூர மற்றும் நீண்டதூர இலக்குகளை துல்லியமாக தாக்கி அளிக்கும் ஏவுகணைகளின் திறனை சீனா மேம்படுத்தியுள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணைகள் அண்மையில் நடைபெற்ற சீனாவின் இராணுவ அணிவகுப்பில் காட்சிப் படுத்தப்பட்டு இருந்தன. இந்த நிலையில் சிறிய மற்றும் பெரிய போர் கப்பல்களிலிருந்து அணு ஆயுதங்களை ஏந்தி சென்று தாக்கும் வகையில் ஏவுகணை திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதாக சீன அரசு தொலைக்காட்சி வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணையை பயன்படுத்தி குறைந்த தூர மற்றும் நீண்டதூர இலக்குகளை தரையிலும் கடலிலும் தாக்கி அளிக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீன இராணுவத்தின் வலிமையை அதிகரிக்க அதிபர் மேற்கொண்டு வரும் நடவடிக்கையில் ஒரு பகுதியாக ஏவுகணையின் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிப்பவர்கள் பற்றி, பொதுமக்கள் தகவல் தெரிவிக்கும் வகையில் இணையதளம் ஒன்றை சீன அரசு தொடங்கியுள்ளது. சீனாவின் தேசிய பாதுகாப்பு கல்வி தினம் அன்று www.12339.gov.cn என்ற இணைய தளத்தை அந்நாட்டு தேசிய பாதுகாப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது. அரசு அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுக்க முயற்சிப்பவர்கள், ஆயுதக் கிளர்ச்சிக்கு தூண்டுபவர்கள், அந்நிய உளவாளிகள் பற்றி தகவல் தெரிவிக்கலாம் என அந்த இணையதளத்தில் கூறப்பட்டுள்ளது. அச்சுறுத்தல் விளைவிப்பவர்கள் பற்றி தகவல் தெரிவிப்பவர்களுக்கு அரசு மூலம் வெகுமதி அளிக்கப்படும் என்றும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை பயன்படுத்தி தவறான தகவல் அளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலிய போர்க் கப்பல்களை வழிமறித்தது சீனா!

தென்சீனக் கடல்பரப்பில் அவுஸ்திரேலியக் கப்பல்களை சீனா வழிமறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தென்சீனக் கடல் பரப்பு முழுவதையும் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதற்கு வியட்நாம், பிலிப்பைன்ஸ் நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பன்னாட்டுத் தீர்ப்பாயத்தில் இது தொடர்பான வழக்கு நடைபெற்று வந்தது. அதில் தென்சீனக் கடல் பரப்பில் சீனாவுக்கு உரிமை இல்லை என்று தீர்ப்பு வெளியானது. எனினும் இந்தத் தீர்ப்பை புறந்தள்ளி சீனா, தென்சீனக் கடல் பரப்புரை ஆக்கிரமித்து வைத்துள்ளது.

இதேவேளை, தென்சீனக் கடல் பகுதி பன்னாட்டுப் போக்குவரத்துக்கு உரித்தான பகுதி என்று அமெரிக்காவும், அவுஸ்திரேலியாவும் வலியுறுத்தி வருகின்றன. எனினும், குறித்த பகுதியில் அவ்வப்போது கண்காணிப்பில் ஈடுபடுவதும், அந்த வழியால் வரும் கப்பல்களை இடைமறிப்பதும் சீனாவின் வழக்கமாகவே மாறிவிட்டது. அவ்வாறாக வியட்நாமுக்குச் சென்ற அவுஸ்திரேலியாவின் இரண்டு போர்க் கப்பல் ஓர் எண்ணெய்க் கப்பலை சீனா கடந்த வாரம் இடைமறித்தது. இதையடுத்து அந்தப் பகுதியில் சிறு பதற்றம் ஏற்பட்டு மறைந்தது.

மூன்று கப்பல்களும் பத்திரமாக வியட்நாம் சென்றுள்ளன. தென்சீனக் கடலின் பன்னாட்டு எல்லையில் அவுஸ்திரேலிய போர்க் கப்பல்கள் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடும். எத்தகைய அச்சுறுத்தல்களும் அஞ்ச மாட்டோம் என்று அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தென் சீனக் கடலில் ரோந்து செல்வதற்கு அவுஸ்திரேலிய கடற்படைக் கப்பல்களுக்கு முழு உரிமை இருப்பதாக அந்த நாட்டுப் பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார். இது குறித்து பிரதமர் மார்கம் டர்ன்புல் செய்தியாளர்களிடம் கூறியதாவது, உலகின் எந்த சர்வதேச எல்லைப் பகுதியிலும் கப்பல்கள் மற்றும் வான் வழியாக விமானங்கள் மூலம் ரோந்து செல்வதற்கு எங்களுக்கு பூரண உரிமை உள்ளது. அதன் அடிப்படையில், தென் சீனக் கடல் பகுயில் எங்களது கப்பல்கள் எப்போது வேண்டுமானாலும் ரோந்து செல்லும் என்றார்.



தாக்குதலில் காயமடைந்த 15 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பயங்கரமான சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனது ஆறுதலை தெரிவித்துள்ளார் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்த சம்பவ இடத்தில் மீட்பு பணியில் ஈடுபட்டுருப்பவர்களுக்கு நன்றி நாங்கள் இதை தீவிரமாக கண்காணித்து கொண்டிருக்கிறோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் தாக்குதலில் சிறீலங்காவின் ஹொரண பகுதியை சேர்ந்த ரேனுகா அமரசிங்க என்ற இளம் பெண்ணும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அயர்லாந்து எல்லை விவகாரத்தால் பிரித்தானியா பிரிவது தடைப்படும்

## ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை

அயர்லாந்து எல்லை விவகாரத்துக்கு தீர்வு காணாவிட்டால், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கான ஒப்பந்தம் நிறைவேறாது என்று அந்த ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்ட் டஸ்க் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்காக 2016ம் ஆண்டு உள்நாட்டில் 'பிரெக்சிட்' என்ற பெயரில் பிரித்தானியா நடத்திய கருத்துக்கணிப்பு வெற்றி பெற்றது. இதையடுத்து, 2019ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில், பிரித்தானியாவில் உள்ள வடஅயர்லாந்து மாகாணத்துக்கும், அயர்லாந்து நாட்டுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்சனை நீடித்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள உறுப்பு நாடுகள், தங்களுக்கு இடையே நடைபெறும் எல்லைவழி வர்த்தகத்துக்கு சுங்கச்சாவடி அமைக்கக்கூடாது, பிற உறுப்பு நாடுகளின் மக்களை கடவுச்சீட்டு இல்லாமல் பயணிக்க அனுமதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. தற்போது பிரித்தானியாவும், அயர்லாந்தும், ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடுகளாக உள்ள போதிலும் எல்லைவழி வர்த்தகம், கடவுச்சீட்டு இல்லா பயணம் உள்ளிட்ட விவகாரங்களில் பிரித்தானியா அவ்வப்போது பிரச்சனை செய்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா விலகும் பட்சத்தில் இந்த சிக்கல் மேலும் அதிகரிக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆகவே, ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறினாலும் வட அயர்லாந்து மாகாணம் மட்டும் ஒன்றியத்தில் நீடித்திருக்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டது. அந்த யோசனையையும் பிரித்தானியா நிராகரித்தது.

இந்நிலையில், பிரித்தானிய நாடாளுமன்றத்தில், ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள் சார்பாக டொனால்ட் டஸ்க் சார்பில் கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், 'பிரித்தானியா எடுத்துள்ள பிரெக்சிட் முடிவு காரணமாக எழுந்துள்ள பிரச்சனைக்கு அந்நாட்டு அரசே தீர்வு காண வேண்டும். எந்தத் தீர்வும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் விடுதலை அளிக்கும் ஒப்பந்தம் நிறைவேறாது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



செப்டம்பரில் தனது 117வது வயதில் மரணம் அடைந்த நிலையில் நபி அந்த இடத்தினை பிடித்துள்ளார். அவர் 7 மாதங்களுக்கு முன் இந்த சாதனையை அடைந்ததற்காக நடந்த நிகழ்ச்சியில் இசை கருவிகளின் இசைக்கேற்ப தனது கைகளை அசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இவரது மறைவை தொடர்ந்து மற்றொரு ஜப்பானிய பெண்ணான சியோ மியாகோ உலகின் மிக வயது முதிர்ந்த பெண் என்ற இடத்தினை பிடித்துள்ளார். 10 நாட்களில் 117 வயது ஆகவுள்ள சியோ மியாகோ, டோக்கியோ நகரின் கனகாவா பகுதியில் வசித்து வருகிறார்.

## இனவிருத்தி ஆற்றல் பாதிக்கும் வலி நிவாரணிகள்!

வலிநீக்கி மருந்துகளை உள் எடுக்கும் கர்ப்பிணிப் பெண்கள் தமது கருவிலுள்ள ஆண் குழந்தைகளின் இனவிருத்தி ஆற்றலுக்கு தீங்கு விளைவிப்பதாக பிரித்தானிய விஞ்ஞானிகளின்



ஆய்வு எச்சரிக்கிறது. அதேசமயம் இந்த வலிநீக்கி மருந்துகள் பெண் குழந்தைகளது இன விருத்தி ஆற்றலையும் பாதிக்கக் கூடியவை என அவர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு இரு மாதங்களுக்கு முன்னர் இபுரோபென் மற்றும் பரசிற்றமோல் உள்ளடங்கலான வலிநீக்கி மருந்துகள் தொடர்பில் பிரான்ஸ் விஞ்ஞானிகளால் நடத்தப்பட்ட ஆய்வில் அந்த மருந்துகள் கருப்பை கலங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது கண்டறியப்பட்டிருந்தது. ஆனால் தற்போது பிரித்தானிய விஞ்ஞானிகளால் நடத்தப்பட்டுள்ள புதிய ஆய்வில் அந்த மருந்துகள் ஆண் குழந்தைகளின் விந்தணு உற்பத்தியைப் பாதிப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வலிநீக்கி மருந்துகள் கருவிலுள்ள குழந்தையின் மரபணுவில் மாற்றத்தை ஏற்படுத்தி பரம்பரை பரம்பரையாக அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் கடத்தும் அபாயம் மிக்கவை என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். ஒரு வார காலம் பரசிற்றமோலைப் பயன் படுத்தினால் கர்ப்பிணிப் பெண்களின் முட்டை உற்பத்திக் கலங்கள் 40 சதவீதத்தால் குறைவடைவது கண்டறியப்பட்டுள்ள தாக பிரித்தானிய எடின்பேர்க் பிராந்திய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# உறவினர்களை நினைவுகூர...

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான மாணவர்களின் குடும்ப நிலையைக் பொறுத்தவரை அவர்கள் கல்வி கற்பதற்கான மனநிலையில் இல்லை. காரணம், நடைபெற்று முடிந்த யுத்தத்தில் அவர்களின் பெற்றோர், உறவினர்கள் என பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதைவிட அதிக தொகையினர் காயமடைந்துள்ளனர். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருப்பவர்கள் இவர்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களேயாவர்.

மேற்படி மாணவர்கள் உள ரீதியாக பாதிப்புக்களை எதிர்நோக்கியிருக்கின்றனர். யுத்தம் தீவிரம் பெற்றிருந்தபோதே இவர்கள் பிறந்தனர். பெற்றோர் இவர்களை அங்கும் இங்கும் கொண்டு சென்று பெரும் துன்பங்களுக்கு ஆளாகினர். இவர்களைப் போன்றுதான் ஏனைய நூற்றுக்கணக்கான மாணவர்களும் இவ்வாறான நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளனர்.

உள நெருக்கடிகளில் இருந்து அவர்கள் மீட்சி பெறுவதற்கு அவர்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தல் வழங்கப்படவேண்டும். அந்த உளவள ஆற்றுப்படுத்லை வழங்கக்கூடிய திறமை மேற்படி கட்டிடங்களுக்கு உண்டு.

தமது பெற்றோர், அல்லது உறவினர்கள் மரணமடைந்துள்ள, அல்லது காணாமற்போயுள்ள, அல்லது காயமடைந்துள்ள நிலையில், அவர்களின் வடுக்களைச் சுமந்தவர்களாக இருக்கின்ற மாணவர்கள் தமது உறவினர்களை நினைவு கூரும்போது மன ஆறுதல் பெறுவார்கள். அவர்களின் மன இறுக்கங்கள் படிப்படியாகக் குறையும். இது உளவியலாளர்களின் அறிவுறுத்தல்.

இதை விடுத்து, பொதுமக்களின் நினைவாக எழுப்பப்படும் தூபி எதிர்காலத்தில் அவர்கள் கூறுகின்ற பயங்கரவாதத்தை உயிர்பெற வைக்கும் என்பது மூடநம்பிக்கை. சிறீலங்கா அரசின் முட்டாள்தனம்.

கொடூரமான முறையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த சிறீலங்கா அரசு, தான் ஆக்கிரமித்த பகுதிகளில் முதன் முதல் செய்த காரியம், மாவீரர் துயிலும் இல்லங்களைச் சிதைத்தமையாகும். துயிலும் இல்லங்களில் இருந்த புலிகள் உயிர்பெற்று தங்களை அழித்துவிடுவார்கள் என சிறீலங்கா படை அஞ்சியது. நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டால் மீண்டும் இன மோதல்கள் வெடிக்கும் என சிறீலங்கா அரசாங்கம் கருதுமாக இருந்தால் அதைவிட முட்டாள்தனம் வேறில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ள நாடுகளில், தமிழீழத்திற்கு அயல் நாடான இந்தியாவின் - தமிழகத்தில் - தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றம் தமிழின அழிப்பை படம்பிடித்துக் காட்டுகின்றது. சிறீலங்கா அரசாங்கத்தின் இனப்படுகொலையை அந்த முற்றம் அச்சொட்டாக வெளிப்படுத்தி நிற்கின்றது. புலிகளைத் தடை செய்துள்ள அந்த நாடு அந்தக் கலைப்படைப்பை அமைப்பதைத் தடுக்கவில்லை.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது அதேபோன்று விசாலமான முள்ளிவாய்க்கால் முற்றம் அல்ல. ஒரு சிறிய நினைவிடம் மாத்திரமே. வருடாந்தம் மே 18 ஆம் திகதி இறந்தவர்களுக்காக தீபமேற்றி வழிபடுவதற்கான ஏற்பாடு. இந்த நினைவிடம் அமைப்பதற்கு சிறீலங்கா அரசு அனுமதி மறுக்குமானால், மாணவர்கள் போராட்டங்களின் மூலமே அதைப் பெற்றுக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். நாம் விரும்பியோ விரும்பாவிட்டாலோ போராட்டமே வாழ்க்கையாகவும் வாழ்க்கையே போராட்டமாகவும் மாறிவிட்டது.

# அவலச் சாவுகளும்...

இவரது உயிரிழப்பு தொடர்பில் விசாரணை நடத்திய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி தெரிவித்ததாவது, பல ஆண்டுகளாக மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்த சாந்தகுமாரி, அடிக்கடி தான் சாகப்போவதாக குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார். ஒரு முறை இவர் தவறான முடிவெடுத்து உயிர்துறக்க முற்பட்ட நிலையில் காப்பாற்றப் பட்டார். கடந்த 17ம் திகதி இரவு 12 மணியவில் தனக்குத் தானே மண்ணெண்ணை ஊற்றித் தீ மூட்டிக் கொண்டார். சத்தம் கேட்டு அறைக்குள் நுழைந்த குடும்பத்தினர் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். சிகிச்சை பலன் இன்றி அவர் உயிரிழந்தார்.

### காணாமல் போன 8 பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் இருந்து கடந்த மாதம் 26ம் திகதி காணாமல் போன 8 பிள்ளைகளின் தந்தையான மனுவேல் பிள்ளை (அல்பேட் 71 வயது) கடந்த 18ம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி ஓலைத்தொடுவாய், உவரி காட்டுப்பகுதியில் இருந்து சிதைவடைந்த நிலையில் குறிப்பிட்ட நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அல்பேட் காணாமல் போன நிலையில் உவரி கட்டுப்பகுதியில் சிதைவடைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. அமைதிப்படையில்....

இலங்கை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆய்வுகள் நிறைவடையும் முன்னரே, இனப்படுகொலை இராணுவத்தின் 49 பேர் கொண்ட குழுவொன்று கடந்த பெப்ரவரி மாதம் லெபனானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதையடுத்து, ஏனைய சிறீலங்காப் படையினரை லெபனானுக்கு அனுப்பப்படுவதை ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் செயலகம் தடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தினரால் புதிதாக வெளிநாட்டு நடவடிக்கைப் பணியகம் ஒன்று கொழும்பு3ல் அமைந்துள்ள பழைய டச்சு கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அமைதி மாளிகை (Sama Medura) என்ற பெயரில், இந்தப் பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு அமைதிகாப்பு மற்றும் வெளிநாட்டு நடவடிக்கை கடப்பாடுகளை நிறைவேற்றும் செயற்பாடுகளை இந்தப் பணியகம் மேற்கொள்ளவுள்ளது. பணியகத்தின் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் மேர்வின் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில், அமைதிகாப்பு படைக்கான படைப்பிரிவுகளை அனுப்புதல், அவர்களுக்கான பயிற்சிகள், செயற்பாடுகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை இந்த பணியகமே மேற்கொள்ளும் என்று சிறீலங்கா தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பால்பண்ணைத் தொழிலாளிக....

எனினும், இது தொடர்டபாக விவசாய அமைச்சரான தமிழரசுக் கட்சியின் கிழக்கு மாகாண உறுப்பினர் கி. துரைராஜசிங்கம் அவர்களிடம் முறையிட்ட போது இப்போதைக்கு இப்பிரச்சினைகளை பார்க்கமுடியாது எனக் கூறியுள்ளார். தற்போது கால்நடைகளை மேப்பதற்கு பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். கால்நடைகளை மேய்க்கும் பண்ணையாளர்களை வனஇலாகாவினர் கைது செய்கின்றனர்.

எவ்வாறாயினும், பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சட்டநடவடிக்கையினால் 300க்கும் மேற்பட்ட அத்துமீறிய குடியேற்றக்காரர்கள் நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக வெளியேற்றப்பட்டார்கள். தற்போது, 3 குடும்பத்தினர் அப்பகுதியில் பயிர்ச் செய்கை மற்றும் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர். கால்நடைகள் மேச்சலுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் இவ்வாறு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவருவதனால் தான், எமது கால்நடைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படுவதாக பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்குள் அத்துமீறி குடியேறிக் கொண்டு, குறித்த பகுதியை அம்பாறை மாவட்டத்தின் எல்லைப் பகுதி எனவும், பொலநறுவை மாவட்டத்தின் எல்லைக்குட்பட்டது எனவும் சிங்களவர்கள் தெரிவிக்கின்றனர்.

வனஜீவராசிகள் எனக் கூறிக் கொண்டுவந்தவர்கள் மாடு மேய்ப்பவர்களை தாக்கியதுடன், வாடிகளையும் எரியூட்டியுள்ளார்கள். இச்சம்பவம் கடந்த 20.04.2018 அன்று வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணியளவில் ஜீப் வண்டியில் வந்த வனஜீவராசி அதிகாரிகள் வடிவேல் சோமலிங்கம் என்பவரை கைது செய்ததுடன், அவரை அழைத்துக் கொண்டு ஏனைய பண்ணையாளர்களின் இடங்களுக்கு சென்றுள்ளனர். எனினும், அங்கு எவரும் இருக்கவில்லை. அந்த வாடியில் இருந்த பொருட்களை தீயிட்டுக் கொளுத்தியதுடன், மாடு அடைக்கும் காலையை சேதமாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

மாடு மேப்பவர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதாக தெரிவித்து இவர்களை கைது செய்துள்ளனர். இப்பகுதியில் எவரும் இருக்கக் கூடாது மாடுகளையும் எடுத்துக் கொண்டு வெளியேறவேண்டும் என அந்த அதிகாரிகள் எச்சரித்து விட்டுச் சென்றுள்ளனர். இவர்களின் பிரதான நோக்கம் இப்பகுதி மகாவலி பி வலயமாகும். எனவே, இப்பகுதியிலிருந்து பண்ணையாளர்களை வெளியேற்றுவதன் மூலம் இப்பகுதியை நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கும், சிங்களவர்களை குடியேற்றுவதற்குமாக திட்டத்தை கொழும்பு அரசாங்கம் முன்னெடுத்துவருகிறது.

எவ்வாறாயினும், மேச்சல்தரைக்கென ஒதுக்கப்பட்ட மைலத்தமடு, மாதவணை மற்றும் பெரிய மாதவணை ஆகிய இடங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்குட்பட்டவை என்பது நீதிமன்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கால்நடைகளின் மேச்சலுக்கென ஒதுக்கப்பட்ட மைலத்தமடு, மாதவணை பகுதியில் வைத்து கடந்த 24.ஜனவரி.2015 அன்று வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளினால், பண்ணையாளர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டு ஹெகியத்தகண்டி நீதிமன்றில் நிறுத்தப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

கடந்த மாதம் 22.03.2018 அண்று ஹெகியத்தகண்டி சுற்றுலா நீதிமன்றில் 11 ஆவது தடவை வழக்குத் விசாரணை இடம்பெற்றுள்ளது. இதன் போது, வனஜீவராசித் திணைக்களக அதிகாரிகளுக்கான குறுக்கு விசாரணையை சட்டத்தரணி எம்.வி.வண்டார முல்லேமகவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் போது, வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட பண்ணையாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குள் சென்று கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தினர். அத்துடன், கைது செய்யப்பட்டவுடன், காவல்துறையினரிடம் ஒப்படைக்காமல் ஹெகியத்தகண்டி வனஜீவராசிகள் திணைக்களக அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் ஆட்சேபனை தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

# விக்கினேஸ்வரனின் புதிய கட்சிக்கு...

கூட்டமைப்பின் உறுப்பினராகவும் இருந்தவர். அந்தவகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையின் கொள்கைகளுடன் இணங்கி செயற்பட இயலாது என்பதை முதலமைச்சருடைய பல உரைகளில் இருந்து அவதானிக்க கூடியதாக இருந்தது. அது தமிழ் மக்களுடைய அபிலாசைகளை பாதிக்கும் என்ற நிலைப்பாடு வெளிப்பட்டிருக்கின்றது. அதனையே நாங்களும் கூறுகிறோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொள்கைகள் தமிழ் மக்களின் சாபக்கேடாக மாறியிருக்கின்றது.

மேலும் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்தால் முதலமைச்சர் எப்படி செயற்படப் போகிறார்? எப்படியானவர்கள் அவர்களுடைய கட்சியில் கூட்டு சேரப் போகிறார்கள்? என்பதும் முக்கியமான விடயமாகும். அந்த வகையில் முதலமைச்சர் கொள்கையில் விட்டுக் கொடுப்பில்லாத தரப்புக்களுடன் கூட்டுச் சேரவேண்டும் என நாங்கள் எதிர்பார்கிறோம்.

நாங்கள் உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் கொள்கைவாதிகள் என நம்பி ஒரு தரப்புடன் கூட்டுச்சேர்வதற்காக முயற்சித்திருந்தோம். ஆனால் அது கடைசியில் கொள்கையே இல்லாத தரப்புக்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டது. அப்படியான தரப்புக்களுடன் முதலமைச்சர் எக்காலத்திலும் கூட்டுச்சேரக் கூடாது. காரணம் அவர்களுடைய கொள்கை தமிழ்தேசிய கூட்டமைப்பின் கொள்கையிலும் பார்க்க ஆபத்தான கொள்கையாக உள்ளது.

ஆகவே முதலமைச்சர் கொள்கையில் விடாப்பிடியான தரப்புக்களுடன் கூட்டு வைப்பாராக இருந்தால் அவருடன் இணைந்து செயற்படுவதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தயாராகவே உள்ளது. மேலும் உள்ளூராட்சி சபை தேர்தலின் ஊடாக தூய்மையான தமிழ்த் தேசிய வாதத்திற்கான அடித்தளம் இடப்பட்டிருக்கும் நிலையில் முதலமைச்சர் தனியான கட்சி ஒன்றை உருவாக்குவதாக எழுந்துள்ள செய்திகள் முக்கியத்துவமானவை என்று கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களின் கருத்தை....

உணர்ந்து கொண்டதால் பெரும்பாலும் அனைத்து நாளிதழ்களும் இதுபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. அதில் அன்றாட அரசியல், பொருளாதார நிகழ்வுகள், சமூகப் பிரச்சனைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கட்டுரைகள் வருகின்றன. பெரும்பாலும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த வல்லுநர்களால் இந்தக் கட்டுரைகள் எழுதப்படுகின்றன.

இந்த கட்டுரைகளை தொடர்ந்து வாசித்து வரும் 3,567 பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. அதில், அரசியல் நிகழ்வுகள், சமூகப் பிரச்சனைகளில் மக்களின் கருத்துகளை பிரதிபலிப்பதாக நாளிதழ் கட்டுரைகள் விளங்குகின்றன. மேலும், ஒரு விடயம் தொடர்பாக நாம் கொண்டிருக்கும் கருத்தை மாற்றும் அளவுக்கு அக்கட்டுரைகள் வலுவானதாகவும், புதிய தகவல்களுடன் உள்ளன.

அக்கட்டுரைகளில் உள்ள கருத்துகள் சில நமது எண்ணத்தில் இருந்து மாறுபட்டதாக இருந்தாலும், காலப்போக்கில் அக்கட்டுரையில் கூறப்பட்டது சரிதான் என்பது தெரியவருகிறது. இதன் மூலம், தங்கள் கருத்துக்கு மாற்றாக கட்டுரையில் இருக்கும் கருத்துகளை ஏற்றுக் கொள்வதாக பெரும்பாலானோர் தெரிவித்துள்ளனர் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

# மாவீரர் நினைவு சுமந்த பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் 2018









தமிழர் ஒருங்கிணைப்புக்குழு – பிரான்சு தமிழர் விளையாட்டுத்துறை நடாத்திய மாவீரர் நினைவு சுமந்த உள்ளரங்கச் சுற்றுப் போட்டிகள் 2018ன் பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) பரிசின் புறநகர்ப்ப பகுதியில் ஒன்றான நியுலி சூர்மானில் இடம் பெற்றது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் 17.07.1996 அன்று கிளிநொச்சியில் சிறீலங்காப் படைகளுடனான மோதலில் வீரச்சாவைத் தழு விக் கொண்ட இரண்டாம் லெப்டினன் வனிதா அவர்களின் சகோதரன் ஈகைச்சுடரினை ஏற்றி மலர் அஞ்ச லியைச் செலுத்தினார். தொடர்ந்து நல்லூர் ஸ்தான் விளையாட்டுக்கழகம், தமிழர் விளையாட்டுக் கழகம் 93, யாழ்டன் விளையாட்டுக் கழகம், மற்றும் பாடுமீன் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 111 போட்டியா ளர்கள் பங்குபற்றிச் சிறப்பித்தனர். போட்டியில் பங்குபற்றிய கழகத்தினர் தமிழர் விளையாட்டுத்துறையுடன் நடுவர்களாகப் பணியாற்றி போட்டிகள் விரைவாக நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினர் .

**போட்டி முடிவுகள் வருமாறு!**

**15 வயதிற்கு உட்பட்டோர் ஆண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: வி. நிவேதன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93
2ம் இடம்: தி. நிந்துசன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93
3ம் இடம்: பே. பிரசான் யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: த. மதுமிதன் யாழ்டன் விளையாட்டுக் கழகம்

**15 வயதிற்கு உட்பட்டோர் பெண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: ம. லாமினி பாடுமீன் விளையாட்டுக் கழகம்
2ம் இடம்: உ.றெனிசா யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3ம் இடம்: பானு'ா யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: ஜெனிசா தமிழர் விளையாட்டுக் கழகம் 93

**19 வயதிற்கு உட்பட்டோர் ஆண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: வைஸ்ணவன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93
2ம் இடம்: ஜொனார்த்தன் நல்லூர்ஸ்தான் வி. கழகம்
3ம் இடம்: லதிசியோன் யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: கி. ஆகாஸ் தமிழர் விளையாட்டுக் கழகம் 93

**19 வயதிற்கு உட்பட்டோர் பெண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: சமிதா நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்
2ம் இடம்: லக்சிகா யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3ம் இடம்: தேனுகா யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: திரேசிகா தமிழர் விளையாட்டுக் கழகம் 93

**19 வயதிற்கு மேற் பட்டோர் ஆண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: பிரதீபன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93
2ம் இடம்: த. நிசாந்தன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93
3ம் இடம்: ஜர்மிலன் யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: சு. நிசாந்தன் தமிழர் விளையாட்டுக் கழகம் 93

**19 வயதிற்கு மேற் பட்டோர் பெண்கள் ஒற்றையர்**

1ம் இடம்: கஸ்தூரி நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்
2ம் இடம்: கஜானி நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்
3ம் இடம்: அஜந்தா நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: நிலானி நல்லூர்ஸ்தான் விளையாட்டுக் கழகம்

**19 வயதிற்கு உட்பட்டோர் ஆண்கள் இரட்டையர்**

1ம் இடம்: நிகேதன் – லதிசியோன் யாழ்டன் வி. கழகம்
2ம் இடம்: றெமாஜெராட் – நிரக்சன் யாழ்டன் வி.கழகம்
3ம் இடம்: ஜொனத்தன் – ஜெமில்ரன் நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
4ம் இடம்: தனுசன் – அனுசன் நல்லூர் ஸ்தான் வி.கழகம்

**19வயதிற்குட்பட்டோர் பெண்கள் இரட்டை யர்**

1ம் இடம்: லக்சிகா – தேனுகா யாழ்டன் வி.கழகம்
2ம் இடம்: சமித்தா – ஆசினா நல்லூர் ஸ்தான் வி.கழகம்
3ம் இடம்: சிவேகா – தாரணி யாழ்டன் வி. கழகம்
4ம் இடம்: அககுரபி – குழலிசை தமிழர் வி.கழகம் 93

**19வயதிற்கு மேற்பட்டோர் ஆண்கள் இரட்டை யர்**

1ம் இடம்: பிரதீபன் – மோகன் தமிழர் வி.கழ கம் 93
2ம் இடம்: நிசாந்தன் – நல்வராசா தமிழர் வி.கழகம் 93
3ம் இடம்: ஜர்மிலன் – ரத்ராஜ் யாழ்டன் வி. கழகம்
4ம்இடம்:தேவமனோகரன்–சுபேசன் தமிழர் வி.கழகம் 93

**19வயதிற்கு மேற்பட்டோர் பெண்கள் இரட்டை யர்**

1ம் இடம்: கஸ்தூரி – நிசா நல்லூர்ஸ்தான் வி.கழகம்
2ம் இடம்: சுதேசனா – சுபேசிகா யாழ்டன் வி. கழகம
3ம் இடம்: அஜந்தா – தர்சி நல்லூர்ஸ்தான் வி. கழகம்
4ம் இடம்: தானுாகா – திசானிகா தமிழர் வி. கழகம் 93

# பிரான்சு பொண்டி தமிழ்ச்சோலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்!

பாரிசின் புறநகர் பகுதியில் ஒன்றான 93 மாவட் டத்தின் பொண்டி தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் பொண்டி தமிழ்ச்சோலை மாணவர்களிடையே யான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 15.04.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி க்கு ஆரம்பமாகி சிறப்பாக இடம்பெற்றன.









# கார்ஜ் சார்சல் தமிழ்ச்சங்க இல்ல மெய்வல்லுநர் போட்டி !

பாரிசின் புநகர் பகுதியில் ஒன்றான கார்ஜ்சார்சல் தமிழ்ச் சங்கம் நடா த்திய மெய்வல்லுனர்போட்டி முதல் தடவையாக கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழர் விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் சிறப் பாக இடம்பெற்றது.









# பிரான்சில் தமிழ்மொழி பொதுத் தேர்வு 2018

## மேற்பார்வையாளர் நடத்துநருக்கான செயலமர்வு!





தமிழர் கல்விமேம்பாட்டுப்பேரவையின் ஏற்பாட் டில் பிரான்சு தமிழ்ச்சோலைத் தலைமைப்பணி யகம் வருடாந்தம் நடாத்தும் தமிழ்மொழி பொதுத் தேர்வு மற்றும் புலன் மொழி வளத்தேர்வு 2018ல் கலந்துகொள்ளும் மேர்பார்வையாளர்கள், தேர்வு நடத்துநர்கள், தமிழ்ச்சோலைப் பள்ளி ஆசிரியர் கள் ஆகியோருக்கான செயலமர்வு தமிழ்ச் சோலை தலைமைப் பணியகத்தின் ஏற்பாட்டில் கடந்த (22) ஞாயிற்றுக்கிழமை பாரிசின் Mairie de Clichy பகுதியில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றிந் திருந்தது.

ஒருநாள் செயலமர்வாக இடம்பெற்ற இந் நிகழ்வில் சுமார் 260 இற்கும் மேற்பட்ட தமிழ்ச் சோலை ஆசிரிய ஆசிரியைகள் கலந்துகொண்டு தேர்வு தொடர்பான சந்தேகங்களை கேட்டுத் தெரிந்துகொண்டனர். தமிழ்ச்சோலைத் தலை மைப் பணியகத்தின் சார்பில் திரு.அகிலன், திரு.மகி ந்தன் ஆகியோர் தேர்வுதொடர்பான அறிவுறுத்தல் களை சிறப்பாக வழங்கியிருந்தனர். இம்முறை பிரான்சில் Île De France – மற்றும் பிரான்சின் வெளிமாவட்டங்களிலும் சேர்த்து மொத்தம் 5 ஆயிரத்து 894 பேர் தேர்வுக்குத் தோற்றவுள் ளதுடன் 260 இற்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையாற்றவுள்ளதுடன், வரும் 05.05.2018 சனிக்கிழமை 21 தேர்வு நிலையங்களிலும் வரும் 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை 18 தேர்வு நிலை யங்களிலும் 13.05.2018 ஞாயிற்றுக்கிழமை 13 தேர்வு நிலையங்களிலும் புலன்மொழி வளத் தேர்வு கேட்டல், பேசுதல், வாசித்தல் என்ற பிரிவு களில் நடைபெற ஏற்பாடகியுள்ளதாகவும், தமிழ் மொழி பொதுத் தேர்வு வரும் 02.06.2018 சனிக் கிழமை LA MAISON DE EXAMENS 7, RUE RUE ERNEST RENAN 94114 ARCEIL (RER-B LA PLACE) என்ற முகவரியில் இடம்பெறவுள்ள தாகவும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் தெரிவித்துள்ளது.

# பிரான்சில் இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வு 2018

தமிழீழத் தாயவள் அன்னை பூபதியின் 30 வது ஆண்டு நினைவு சுமந்த நாட்டுப்பற்றாளர் நினை வேந்தல் நிகழ்வும், ஆனந்தபுரத்தில் வீரகாவிய மான வீரமறவர்களின் 9ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் பாரிசின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான ஒல்னே சூ புவாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) அன்று பிரான்சில் சாவடைந்த நாட்டுப்பற் றாளர் திரு.சிவராஜா அவர்களின் குடும்பத்தினர் ஈகைச்சுடர் ஏற்றிவைக்க, 16.12.2011 அன்று பிரான் சில் சாவடைந்த நாட்டுப்பற்றாளர் திரு. அன்ரனி பிரான்சிஸ் அவர்களின் குடும்பத்தினர் மலர்வணக் கம் செலுத்தினர். அகவணக்கத்தைத் தொடர்ந்து பொதுமக்களினால் சுடர்வணக்கமும், மலர்வணக் கமும் இடம் பெற்றது. அரங்க நிகழ்வுகளாக தமிழ் ச்சோலை மாணவிகளின் எழுச்சி நடனங்களும், அங்கயர்க்கண்ணி இசைக்குழுவின் எழுச்சிப்பா டல்களும், பிரான்சு தமிழ்ப் பெண்கள் அமைப் பைச் சேர்ந்தவர்களின் பேச்சு, மற்றும் கவிதை என் பன இடம்பெற்றன.

சிறப்புரையினை பிரான்சு தமிழீழ மக்கள் பேர வைப் பொறுப்பாளர் திரு. திருச்சோதி அவர்கள் ஆற்றியிருந்தார்.






## பரம் திருமண சேவை

யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமகன், மணமகளை தெரிவு செய்ய தொடர்புகொள்ள வேண்டிய சேவை

தொடர்புகளுக்கு: 0753844284

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## Bbaira Universal Services

TEMPO · Ria Money Transfer

- Devenir agent de RIA et TEMPO.
- To become agent of RIA and TEMPO.

நீங்கள் உங்கள் வர்த்தக நிறுவனங்களில் RIA மற்றும் TEMPO பணமாற்று சேவையை எடுத்து செய்து உங்கள் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்க்கு Bbaira நிறுவனத்தை தொடர்புகொள்ளுங்கள்!

Téléphone: Chargeurs, écouteur, etc.....
Ordinateur: Claviers, Souris, Cartes mémoire, etc...

Contactez : Mobile : 07 82 37 51 43
Email: bbairauniversalservices@gmail.com

## Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை

# Anna Marché

அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...

மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்

V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

## பாரீஸ் அறிவாலயம்

# Paris Arivalayam

7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

# S.P.Raju Jewellery



பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!

199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

## கபறினா இறைச்சிக்கடை



தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

## பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!

# திரு.சகாதேவன்

SAGADEVAN PIERRE

எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

தொடர்பு கொள்ள

சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

## மாங்கல்யம் நகை மாடம்



தரம் - நேரம் - விலை - டிசைன் - உத்தரவாதம்

பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!

ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!

122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

# SEREE MAHAL

ARTICLES DE CADEAUX, BRICOLAGE



வீட்டு விழாக்களுக்குத் தேவையான தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!

100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள் எம்மிடம் கிடைக்கும்!

14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
M La Chapelle ou Gare du Nord

## பரிஸ் லா சப்பலில்

# AMBAAL STORE



பல் பொருள் அங்காடி

Tél: 01 42 05 41 85

192, rue du Fbg.st.Denis 75010 Paris

# VICHNESH SHOP

அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்

8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.



# COIFFURE VITHUSA

TÉL: 06 52 44 89 27

40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

### உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்



- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

DIAPHANECONCEPT

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

Tél.: 01 60 07 34 29

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்

14 Rue Charles V,
75004 Paris.

சுதா / விமல் : 06 34 18 80 04